மாற்றமுறும் சாவால்களிற்கு மத்தியில் ஸ்திரத்தன்மை

டிஜிட்டல் மயமாக்கல் | காபன்நீக்கம் | பரவலாக்கம் | சனநாயகமயமாக்கல்

வருடாந்த அறிக்கை 2021



LECO

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனி


2022

எமது தூரநோக்கு

புத்தாக்க, சுற்றாடல் தோழமையுள்ள வணிகத்தினூடாக மக்களின் வாழ்விற்கு வெளிச்சத்தை வழங்கி மகிழ்வுறுதல்

எமது இலட்சியநோக்கு

தொடர்ச்சியான புத்தாக்கத்தினூடாக சமூகத்திற்கு மிகச்சிறந்த எரிசக்தி தீர்வுகளை வழங்குதல்

எமது விழுமியம்

தகுதியும் ஆற்றலும் மிக்க பணியாளர்கள் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் இலாமீட்டல் ஆகிய இலக்குகளை அடைந்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சுற்றாடலொன்றினுள் மின்சார சேவை விநியோகத்தை மேம்படுத்தி அயராத அர்ப்பணிப்புடன் புத்தாக்க சேவைகளை வழங்கி வாடிக்கையாளர்களைத் திருப்தியடையச் செய்தல்.





உள்ளடக்கம்

கூட்டிணைப்புத் தகவல்கள்	4
டிஜிட்டல் மயமாக்கல்	**5**
தலைவரின் செய்தி	6
பொது முகாமையாளரின் செய்தி	7
பணிப்பாளர் சபை	8
கூட்டிணைந்த முகாமைத்துவம்	12
சிரேஷ்ட முகாமைத்துவம்	13
காபன்துறத்தல்	**14**
கம்பனியின் விவகாரங்கள் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை	16
பரவலாக்கம்	**23**
பொறியியல் பிரிவு	24
செயற்பாட்டுப் பிரிவு	26
மனித வளம் மற்றும் நிர்வாகம்	29
நிதிசார் மீளாய்வ	30
சனநாயகமயமாக்கல்	**32**
உள்ளக கணக்காய்வுத் திணைக்களம்	34
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	35
இலாபம் அல்லது நட்டக் கூற்று	44
ஏனைய விரிவான வருமானக் கூற்று	45
நிதி நிலைமைக் கூற்று	46
உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று	47
காசுப் பாய்ச்சல் கூற்று	49
நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்	50
கடந்த 10 ஆண்டுகளின் பிராதன செயலாற்றல்	95
வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல்	97
பதிலியின் படிவம்	99



கூட்டிணைப்புத் தகவல்கள்

சட்ட வடிவம்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் கீழ் 1983 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு தனியார் பொறுப்புக் கம்பனியாகும்.

பணிப்பாளர் சபையின் தற்போதைய உறுப்பினர்கள்:

திரு. எம்.பி.ஏ.பி. தி சில்வா (தலைவர்)
திரு. என்.எஸ். இளங்ககோன்
கலாநிதி டி.சீ.ஆர். அபயசேகர
திரு. எச்.ஜி. சுமணசிங்க
திரு. என்.பி.கே. ரணவீர
திரு. எஸ்.பி.எம்.டபிள்யூ. ஜெயவர்தன
கலாநிதி ஐ.யு. தெடிகம

துணைக் கம்பனிகளின் தற்போதைய உறுப்பினர்கள்

அன்டே லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட்
திரு. எம்.பி.ஏ.பி. தி சில்வா (தலைவர்)
திரு. லியு ஜியான்வு
கலாநிதி பி.எஸ். நரேந்திர டி சில்வா
செல்வி. யேயே லியு

லெகோ புரஜெக்ட் (பிரைவட்) லிமிடட்
திரு. எம்.பி.ஏ.பி. தி சில்வா (தலைவர்)
திரு. எஸ்.டி.சி. குணவர்தன
திரு. ஏ.டி.ஏ.சி.ஐ. பிரேமச்சந்திர
திரு. எச்.ஜி. சுமணசிங்ஹ
திரு. கே.பி.கே. சிறிவர்தன
திரு. வை.எம். ஜெயரத்ன

கம்பனியின் செயலாளர்

பி.டபிள்யூ. கோர்பெரேட் செக்ரெடெரியல் (பிரைவட்) லிமிடட்
இலக்கம் 3/17 கிங்சி வீதி
கொழும்பு 08.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

இலக்கம் 411, காலி வீதி
இ.எச். குரே கட்டிடம்
கொழும்பு 3

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
கொமர்ஷியல் வங்கி பி.எல்.சீ.
ஹற்றன் நெஷனல் வங்கி பி.எல்.சீ.
நேஷன் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சீ.
மக்கள் வங்கி
சம்பத் வங்கி பி.எல்.சீ.
செலான் வங்கி பி.எல்.சீ.
ஸ்டான்டெட் சார்ட்டெட் வங்கி
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சீ.
தேசிய சேமிப்பு வங்கி (NSB)
DFCC வர்த்தன வங்கி பி.எல்.சீ.
பேன் ஏசியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சீ. PABC
கொழும்பு யூனியன் வங்கி பி.எல்.சீ.

4Digitalization

டிஜிட்டல் மயமாக்கல்

டிஜிட்டல் மாற்றம் என்பது பல்வேறு கம்பனிகளின் உத்திகளின் மையப் பகுதியாகும். லெகோ உம் இதற்கு விதிவிலக்கானதல்ல. எமது வரலாற்றில் இருந்து பல தசாப்தங்களாக நாம் பெற்ற அனுபவத்தையும் அறிவையும் பாதுகாத்து மேம்படுத்தும் அதே வேளை, எமது மரபுரீதியான சொத்துக்களின் கிரயத் தளத்தைக் குறைத்து, எமது டிஜிட்டல் மயமாக்கல் தடத்தை மேம்படுத்துவதற்கு கடினமாக உழைப்பதற்கான தகுந்த நேரம் இதுவாகும். எமது நுகர்வோருக்கு வினைத்திறனான மற்றும் திருப்திகரமான சேவையை வழங்குவதற்காக இயந்திர கற்றல், செயற்கை நுண்ணறிவு, விரிவாக்க நனவாக்கல், கிளவுட், அனலிட்டிக்ஸ் போன்ற தொழில்நுட்பங்களுடன் எமது அதியுயர் பெறுமதிமிக்க டிஜிட்டல் சொத்துக்கள் மற்றும் தரவுகளை எவ்வாறு கையாள்வது என்ற விடயமே இதுவாகும்.






தலைவரின் செய்தி

வெற்றியும் வளர்ச்சியும் அடையப்பெற்று ஓராண்டு நிறைவடைந்துள்ள இந்த வேளையில் எனது எண்ணங்களையும் நல்வாழ்த்துக்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டின் தொடக்கத்தில் எமது களஞ்சிய வளாகங்களில் மிகவும் பெறுமதிமிக்க மரங்களை நாம் நட்டினோம். மேலும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் விஹார மகா தேவி பூங்காவின் நகர்ப்புற வனச் செயற்திட்டத்திற்கு சில "ஹோரா" மற்றும் "ஹால்" மரங்களை நாங்கள் வழங்கினோம். சமீபத்தில் இந்த இரண்டு இடங்களுக்கும் செல்லும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததுடன், வளர்ந்து வரும் இந்த மரங்களைப் பார்த்து ஆழ்ந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தேன். ஒரு பணிப்பாளர் சபையாக இந்தக் கம்பனிக்காக நாங்கள் செய்த அனைத்தும் இந்த வளந்துவரும் மரங்களுக்குச் சமமாகும் என்று நான் கருதுகின்றேன். ஒரு நவீனமயப்படுத்திய புத்திசாலித்தனமான பயன்பாட்டுச் சேவை வழங்குநராக இருக்க வேண்டும் என்ற கம்பனியின் தூரநோக்கானது, இரண்டு தளங்களில் உள்ள எங்கள் ஹால் மற்றும் ஹோரா மரங்களைப் போன்றே தரையில் பௌதீக ரீதியாக விதைக்கப்பட்டு, வேகமாக வளர்ந்து வருகின்றது. லெகோவின் வளமான மண்ணில் நாம் வளர்த்தெடுக்கப்பட்ட இந்த எண்ணக்கருக்கள், எமது வினைத்திறனான மற்றும் திறன் கொண்ட ஊழியர்களால் நன்கு பராமரிக்கப்பட்டு, நமது எதிர்கால மின்சார வனாந்திரத்தை வியாக்கியாணம் செய்யும் விருட்சகங்களாக காணப்படுகின்றன. லெகோ இன் உள்ளக இடைவெளிக்கு உட்பட்டு உருவாக்கத்திலுள்ள பயன்பாட்டுச் சேவையானது விநியோக பயன்பாட்டின் எதிர்கால மாதிரியாக இருப்பதுடன் இது செயலாற்றலின் சின்னமாகவும் காணப்படுகின்றது. லெகொ இன் உள்ளக வாசஸ்தலத்தில் காணப்படுகின்ற வாடிக்கையாளர் சாசனத்திற்கு அமைய இலங்கை விநியோகப் பயன்பாட்டுச் சேவையின் எதிர்காலம் வியாக்கியாணம் செய்யப்படும் என்று நான் உறுதியாக அறிவிக்கின்றேன்.

"அவுட் ஸ்மார்ட் கிரிட்" இயங்குதளங்கள், தாள்களற்ற செயல்முறைகள், நவீன வாடிக்கையாளர் சேவை வரிசைப்படுத்தல்கள், மேம்படுத்தப்பட்ட வலைதள முகாமைத்துவம் மற்றும் செயல்பாட்டு உத்திகள் ஆகியவை எதிர்கால பயன்பாட்டுச் சேவைகளுக்கான கருவித் தொகுப்பாகும். எமது வெளிப்படையான மற்றும் தெளிவான கணக்காய்வுச் செயல்முறை, வணிக செயல்முறை, மீள்-பொறியியல் முயற்சிகள், முறைமை ஆவணப்படுத்தல் மற்றும் "சொல்வதையே செய்தல்-என்ற கொள்கை ஆகியவை எதிர்கால அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் வெற்றிப் பாதைக்கான நெறிமுறைகளாகும். பணிப்பாளர் சபை அறையில் நிலவும் எமது கலாச்சாரம் மற்றும் தொழிற் சங்கங்களின் உறவுமுறை என்பன அரசுக்கு சொந்தமான நிறுவனங்களிற்கான எதிர்கால எடுத்துக்காட்டுகளாகும். எமது தொழிலாளர் உறவுகள் மற்றும் நலன்புரி வரிசைப்படுத்தல் கட்டமைப்புகள், அபிவிருத்திக்கான புதிய கொடுக்கல் வாங்கல் மனப்பான்மை, தொழிலாளர்களின் சேவையாற்றுவதற்கான விருப்பம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்கான விருப்பம் என்பன நிறுவனங்களின் எதிர்காலத்தை வரையறுக்கின்றது.

லெகோ இற்கு வழங்கிய பங்களிப்புகள் மற்றும் உதவிகளுக்காக கௌரவ மின்வலு அமைச்சர் மற்றும் கௌரவ மின்வலு இராஜாங்க அமைச்சருக்கும் மின்வலு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினருக்கும் பணிப்பாளர் சபை, எமது அர்ப்பணிப்புமிக்க பதவியணியினர், பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், வணிகப் பங்காளிகள், வங்கியாளர்கள், வழங்குநர்கள், கம்பனியின் செயலாளர்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிக்குக்கொள்ள விரும்புகிறேன்.



எம்.பி.ஏ.பி. தி சில்வா
தலைவர்



பொது முகாமையாளரின் செய்தி

சிறந்த செயலாற்றலும் வெற்றியும் அடையப்பெற்ற மற்றுமொரு வருடத்தை எமது நிறுவனம் பதிவுசெய்துள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் கொள்கின்றேன். இது எங்கள் தற்போதைய கூட்டிணைந்த திட்டமிடல் சாளரத்தின் கடைசி ஆண்டிற்கு முன்னைய ஆண்டாக இருப்பதுடன் கூட்டிணைந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழி வகுக்கும் ஆண்டாக இது காணப்படும். 2018 முதல் 2022 வரையிலான காலகட்டத்தை ஸ்மார்ட் கிரிட் தொழில்நுட்பத்திற்கு எம்மை இடம்பெயரச்செய்து, அத்தகைய பணிக்கான தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான காலகட்டமாக இக்காலத்தை கம்பனி அடையாளம் கண்டுள்ளது. செயலாற்றல் மதிப்பீட்டு முறையுடன் ஒவ்வொரு பிரிவு முகாமையாளருக்கும் விரிவான செயல் நடவடிக்கை விடயங்கள் பொறுப்பளிக்கப்பட்டு, ஒரு விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தால் கம்பனி இயக்கப்படுகின்றது. செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் செயலாற்றல் என்பன ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அளவிடக்கூடிய விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இது ஒரு செயல்திட்டத்தின் மூலம் நிறுவனத்தை இயக்கும் ஒரு முறையாக இருப்பதுடன் செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) முறைமையின் வெற்றியாகவும் காணப்பட்டது. கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற வெளிப்புற இடையூறுகள் காணப்பட்ட போதிலும் அனைத்து பிரிவு முகாமையாளர்களும் உயர் செயலாற்றலை அடைந்திருந்தனர்.

ஸ்மார்ட் சுவிட்சுகள், ஸ்மார்ட் மீட்டர்கள் மற்றும் வலைதள கண்காணிப்பு சாதனங்கள் போன்ற ஸ்மார்ட் கிரிட் தொழில்நுட்பத்தின் நடைமுறைப்படுத்தல்கள் அடையப்பட்டன. விநியோகக் கட்டுப்பாட்டு மைய தன்னியக்கம், மேம்படுத்திய ரேடியோ தகவல்தொடர்பு முறைமையைச் செயல்படுத்துதல் மற்றும் ஸ்மார்ட் அளவீட்டு தளத்தின் மேம்பாடு போன்ற செயலாற்றல் ஒருங்கிணைப்புத் தீர்வுகளை அமுல்ப்படுத்துதல் என்பன எதிர்வரும் ஆண்டில் சேவை நவீனமயமாக்கலுக்கு வழி வகுக்கும் விதத்தில் அனைத்து இலக்குகளையும் அடைந்திருந்தது.

கம்பனியின் கணக்காய்வு மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் லெகோ இன் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாளுகையை அடைவதற்கான தேவை முன்னிலைப்படுத்தப்பட்டது. வணிகச் செயல்முறை மீள்-பொறியியலின் ஊடாக விரிவான செயல்முறைத் தன்மை மற்றும் அனைத்து செயல்பாட்டு நடைமுறைகளையும் நெறிப்படுத்துதல் ஆகியவற்றைக் கொண்ட புதிய நிதிப் அதிகாரப்பகிர்வு பூரணப்படுத்தப்பட்டது. தாள்களற்ற மற்றும் பரவலாக்கப்பட்ட அலுவலக முறைமையை நோக்கி அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் முழுமையான செயல்முறை தன்னியக்கத்துடன் கூடிய புதிய HRIS முறைமை கொள்வனவு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.

நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமையால் கம்பனியின் தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கான நீண்டகாலத் தேவை உச்ச அளவில் நிறைவேற்றப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வெளிப்புற மற்றும் உள்ளக செயல்பாடுகளின் முழுமையான சேவை மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை அடைவதற்கான தொழில்நுட்ப மற்றும் முறைமைகளுடன் அதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் பெற்றுக்கொள்வது கம்பனியின் இலக்காகும். அடுத்துவரும் கூட்டிணைந்த திட்ட இலக்குகளுக்கு கம்பனியை தயார்படுத்தி இந்தச் செயல்முறையை பூரணப்படுத்துகின்ற இரட்டை ஆண்டுகளாக 2021 மற்றும் 2022 காணப்படுகின்றன. லெகோ இன் அடுத்த சகாப்தத்தின் பிரதான வார்த்தைகளாக எளிமை, வினைத்திறன், கரிசனை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன காணப்படும். செயல்முறை தன்னியக்கமாக்கல், பணி குணாதிசயம், பல்லின வேலைகள், நேர அடிப்படையிலான ஒப்படைகள், வெளிவாரி பெறுகைகள், செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்புகள், வாடிக்கையாளர் குணாதிசயம், சேவை தனிப்பயனாக்கம், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அறிக்கையிடல் மற்றும் தகவல் தளம் போன்ற புதிய முறைமைகள் எதிர்கால நவீனமயப்படுத்திய, எளிமையான மற்றும் டிஜிட்டல் பயன்பாட்டுச் சேவைக்காக நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த அபிவிருத்திச் செயற்பாட்டின் ஊடாக கம்பனியை வழிநடத்துவதில் ஈடுபட்டுள்ள தூரநோக்குச் சிந்தனைகொண்ட எமது தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு எமது ஊழியர்களின் இதயப்பூர்வமான பாராட்டுகளை நான் வழங்கவில்லை என்றால், எனது பங்கிலிருந்து நான் தவறிவிடுவேன். எதிர்காலத்தை நோக்கி எங்கள் நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்லும் இந்த கடினமான பணியில் எனது அற்புதமான தொழில் வல்லுநர்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் ஒன்றிணைந்து உலகளாவிய எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் இந்தப் பணியை முன்னெப்போதும் இல்லாத அளவில் நிறைவேற்றுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதற்கான திறமையும், விருப்பமும், திறனும் எம்மிடம் உள்ளது.

கலாநிதி பி.எஸ். நரேந்திர தி சில்வா
பதில் பொது முகாமையாளர்

பணிப்பாளர் சபை



திரு. அதுல பி. தி சில்வா
சட்டத்தரணி

தலைவர்

சட்டத்தரணி திரு. அதுல பி. தி சில்வா அவர்கள் 2020 பெப்ரவரி 2020 முதல் லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிட்டெட்டின் தலைவராக தற்போதுவரை பதவி வகிக்கின்றார். மேலும், லெகோவின் இரண்டு துணைக் கம்பனிகளான அன்டெ லெகோ மீட்டரிங் (பிரைவட்) லிமிடட் மற்றும் லெகோ ப்ராஜெக்ட்ஸ் கம்பெனி (பிரைவட்) லிமிடெட் ஆகியவற்றிற்கும் அவர் தலைமை தாங்குகிறார்.

கொழும்பு 07 இலுள்ள ரோயல் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், 1996 இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மினரல் சாண்ட்ஸ் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தில் பணிப்பாளராகவும் அரசியலமைப்பு விவகார அமைச்சின் வள உத்தியோகத்தராவும், கொலன்னாவ நகர சபையில் உறுப்பினராகவும், அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆ.்.ப் சிலோன் லிமிடெட்டின் சட்ட ஆலோசகராகவும் ஓஷன்வியூ கம்பெனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தில் பணிப்பாளராகவும் பணியாற்றிய பல்வேறு துறைகளில் பரந்த அனுபவம் கொண்டவராக காணப்படுகின்றார்.



திரு. என்.எஸ். இளங்கோன்
MBA (UK), மனித வள முகாமைத்துவத்தில் டிப்ளோமா (NIBM), FAA (USA)

பணிப்பாளர்

திரு. என்.எஸ். இளங்கோன் அவர்கள் பொது முகாமைத்துவம் மற்றும் தொழிற்துறை நிர்வாகம் ஆகிய துறைகளில் பணியாற்றி வரலாறுபடைத்த அனுபவமிக்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். அத்துடன், அவர் பாதுகாப்பு மற்றும் இராணுவம், அரசாங்கம், நிர்வாகம், மனித வளங்கள், வணிக உத்தி, தலைமைத்துவம் மற்றும் விமானப் போக்குவரத்து ஆகியவற்றில் திறமையானவர். கார்டி.்.ப் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் பொது வணிக நிர்வாகம் மற்றும் நிர்வாகத்தில் கவனம் செலுத்திய வணிக முகாமைத்துவ முதுகலை (எம்.பி.ஏ.) பட்டத்துடன் உடன் கூடிய வலுவான வணிக அபிவிருத்தி நிபுணராக காணப்படுகின்றார். மேலும் திரு. இளங்கோன் பயணிகள் விமானப் போக்குவரத்துத் துறையில் அனுபவமுள்ள வர்த்தக விமானியாக உரிமம் பெற்றவர்.

திரு. இளங்கோன் அவர்கள் தற்போது இலங்கை மின்சார சபையின் தலைவராக கடமையாற்றுவதுடன், அவர் இ.மி.ச. இன் துணைக் கம்பனிகளின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். அவர் தனியார் மற்றும் அரசு துறைகளில் உயர் பதவிகளை வகித்துள்ளார்.



பொறியியலாளர் (கலாநிதி) டி.சி. ரொஹாந்த அபேசேகர

பி.எஸ்சி. (எலக்ட்ரிகல் இன்ஜினியரிங்), பிஎச்.டி. கணினி முகாமைத்துவம் (யுகே).

பணிப்பாளர்

கலாநிதி அபேசேகர அவர்கள் இ.மி.ச. இல் 36 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றி வருவதுடன் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் நாட்டின் மின்வலு வலையமைப்பின் நரம்பு மையமான முறைமைக் கட்டுப்பாட்டு நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் போன்ற உயர் பதவிகளை வகித்து வருகிறார். பதிற்கடமை பொது முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அவர் மேலதிக பொது முகாமையாளர் (கூட்டிணைப்பு உத்திகள்) ஆக பணியாற்றினார். மேலும், இ.மி.ச. இன் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கை வணிக ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியமாக்குவதன் மூலம், இ.மி.ச. இன் இயங்கு தொழிற்படையின் தலைவராக பணிபுரிந்தார்.

இவர் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. (மின்சாரப் பொறியியல்) பட்டம் பெற்றவராகவும் ஐக்கிய இராச்சியத்தின் கேன்டர்பரியில் உள்ள கென்ட் பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தில் கலாநிதி பட்டமும் பெற்றவராகும் காணப்படுகின்றார். இவர் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் உள்ளார்.



திட்டமிடலாளர் என்.பி.கே. ரணவீர

MSc நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற திட்டமிடல் (SL), MSc பிராந்திய திட்டமிடல் (SL), B.Sc. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு, நகர்ப்புற முகாமைத்துவத்தில் டிப்ளோமா (நெதர்லாந்து).

பணிப்பாளர்

திரு. என்.பி.கே. ரணவீர அவர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நகர மற்றும் நாட்டுப்புற திட்டமிடலில் MSc பட்டம் பெற்றுள்ளார். அவர் நெதர்லாந்தின் எராஸ்மஸ் பல்கலைக்கழகத்தில் நகர்ப்புற முகாமைத்துவத்திலும் களனி பல்கலைக்கழகத்தில் பிராந்திய திட்டமிடலிலும் முதுகலைப் பட்டப்படிப்பை முடித்துள்ளார். மேலும், அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் இளங்கலை விஞ்ஞானமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. ரனவீர அவர்கள் நகர அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் 11 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தை பெற்றவராக காணப்படுவதுடன், இலங்கையின் நகர திட்டமிடல் நிறுவகத்தின் இணை உறுப்பினராக தொழில்முறை அனுபவத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் அவர் இலங்கை பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு நிறுவனத்தின் ஆயுள்கால உறுப்பினராகவும் உள்ளார்.

திரு. ரணவீர அவர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) செயலாளராக நியமிக்கப்பட்டதுடன், மீன்பிடிக் கூட்டுத்தாபனம், லங்கா மின்சாரக் கம்பனி பிரைவேட் லிமிடெட், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட், வாட்டர்ஸ் எட்ஜ் ரிக்ரியேஷன்ஸ் லிமிடெட், வாட்டர்ஸ் எட்ஜ் லிமிடெட், நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை, நகர்ப்புற முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம ஆகியவற்றின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

பணிப்பாளர் சபை



திரு. எச்.ஜி. சுமணசிங்க
B.Com. (SL), பொது நிதியில் முதுமானிப் பட்டம் (அவுஸ்திரேலியா)

பணிப்பாளர்

திரு. எச்.ஜி. சுமணசிங்க அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலைப் பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பொதுக் கொள்கை முதுகலைப் பட்டத்தையும் பெற்றார். அவர் 1996 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்தின் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சில் பணியாற்றியுள்ளார். அவர் 2019 இல் மதுவரி பதிற்கடமை ஆணையாளராக இணைந்துகொண்டார்.

திரு. சுமனசிங்க அவர்கள் பல அரச மற்றும் அரை அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அவர் தற்போது இலங்கையில் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றுகிறார்.



திரு. பிரதீப் ஜெயவர்தன

பணிப்பாளர்

திரு. பிரதீப் ஜெயவர்தன அவர்கள் ஒரு தொழில்முனைவோராக காணப்படுவதுடன் வணிக அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் பயிற்சி ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தைக் கொண்டவர். அவர் ஒரு முன்னோடி சூரிய மின்வலு ஆர்வாலரகாவும் தொழில்முனைவோராகவும் 25 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் பெற்றவர். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சமூக மேம்பாட்டுத் துறையில் அவர் ஒரு நிபுணராக காணப்படுகின்றார். அவர் நீண்ட காலமாக பல நிறுவனங்களின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பல பணிகளை மேற்கொண்டுள்ளார். திரு ஜெயவர்த்தன அவர்கள் தற்போது கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராக பணியாற்றுகிறார்.



கலாநிதி இஷங்க தெடிகம

PhD (UK), MEng (UK)

பணிப்பாளர்

கலாநிதி இஷங்க தெடிகம அவர்கள் 2021 சனவரி இல் லங்கா மின்சார கம்பனியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் இங்கிலாந்தின் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் இரசாயன பொறியியலில் MEng பட்டத்தையும் மின்னியல் பொறியியலில் PhD பட்டத்தையும் பெற்றுள்ளார். ஹைட்ரஜன் எரிசக்தி சாதனங்களில் நிபுணரான இவர், எரிபொருள் செல்கள் மற்றும் எலக்ட்ரோலைசர்கள் போன்ற சாதனங்களை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் ஆராய்ச்சி அனுபவம் பெற்றவர்.

அவர் பல பிரசித்தம் பெற்ற சஞ்சிகைகள் மற்றும் சர்வதேச பிரசுரங்களின் பதிப்புரிமைபெற்ற ஆசிரியர் ஆவார். மேலும், ஸ்மார்ட் எனர்ஜி கிரிட் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் விசேட கவனம் செலுத்தி இங்கிலாந்து எரிசக்தி துறைக்கான இணைய பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்குவதில் அனுபவம் பெற்றுள்ளார். ஏதிர்கால பூஜ்ஜிய உமிழ்வை தயாரிப்பதில் இஷாங்கா உண்மையிலேயே ஆர்வமாக உள்ளார் என்பதுடன் பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு தனது நேரத்தையும் முயற்சிகளையும் அர்ப்பணித்து வருகின்றார்.

கூட்டிணைந்த முகாமைத்துவம்



அமர்ந்திருப்பவர்கள் (இ-வ):

1. **திரு. எஸ்.டி.சி. குணவர்தன**
   மேலதிக பொது முகாமையாளர் (பொறியியல்)

2. **திரு. அதுல பி டி சில்வா**
   தலைவர்

3. **கலாநிதி பி.எஸ். நரேந்திர தி சில்வா**
   பொது முகாமையாளர்

நிற்பவர்கள் (இ-வ):

1. **திரு. சந்திமா பிரேமச்சந்திர**
   மேலதிக பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)

2. **திரு. கீர்த்தி தி சில்வா**
   மேலதிக பொது முகாமையாளா (நிதி)-பதிற்கடமை.

3. **திரு. சுரேஷ் ஜெயசேகர**
   மேலதிக பொது முகாமையாளா (செயற்பாடு)

சிரோஷ்ட முகாமைத்துவம்



1. **திரு. ஜி.பி. செனவிரத்ன**
   பிரதிப் பொது முகாமையாளர்
   (வாடிக்கையாளர் சேவைகள்)

2. **திரு. எம்.ஏ.டி.ஏ.கே. சமரவீர**
   பிரதிப் பொது முகாமையாளர்
   (முறைமைச் செயற்பாடுகள்) - மேற்கு

3. **திரு. அஜித் அமரசேன**
   பிரதிப் பொது முகாமையாளர்
   (முறைமைச் செயற்பாடுகள்) - தெற்கு

4. **திரு. மதுர கமகே**
   பிரதிப் பொது முகாமையாளர் (திட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல்)

5. **திரு. சனத் குமார**
   பிரதிப் பொது முகாமையாளர்
   (வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி)

6. **திரு சந்திரசிறி வீரசேகர**
   பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

7. **திரு நாமல் ஏக்கநாயக்க**
   தலைமை உள்ளக கணக்காய்வாளர்

8. **திரு. டி.எம். சமரதிவாகர**
   பிரதிப் பொது முகாமையாளா
   (செயற்திட்டம்)

4D Decarbonization



காபன் நீக்கம்

மனித நல்வாழ்வு மற்றும் உலகப் பொருளாதாரத்தில் சுற்றுச்சூழல் சீரழிவின் விளைவுகள் குறித்து தொற்றுநோய் நம்மை எச்சரித்துள்ளது. பல நாடுகளும் முன்னணி நிறுவனங்களும் கார்பன் நடுநிலைமைக்கு தங்கள் உறுதிமொழியை உறுதியளித்துள்ளன. தொழில்நுட்ப முன்னேற்றமானது புதுப்பிக்கத்தக்க பொருட்களை முன்பு இருந்ததை விட மிகவும் மலிவானதாக ஆக்கியுள்ளது. மின்சாரத் துறையை கார்பன் நீக்கம் செய்வது பலதரப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்துகிறது. எதிர்காலத்தில் நமது செயற்பாடுகளை எவ்வாறு கார்பன் நீக்கம் செய்து கார்பன் தடத்தை குறைக்கலாம் என்பதை லெகோ மேலும் ஆராயும்.



கம்பனியின் விவகாரங்கள் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியினது பணிப்பாளர்கள் சபை அதனது 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அடங்கிய வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பிக்கின்றது.

இந்த அறிக்கை 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளால் வழிநடாத்தப்படுகின்ற முக்கியமான தகவல்களை வழங்குகின்றது.

கூட்டிணைப்புத் தகவல்கள்

பொதுவானவை

லங்கா மின்சார கம்பனி (பிரைவேட்) லிமிடெட் ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய தனியார் கம்பனியாக 1982 இன் 17 அம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு 1983 செப்தெம்பர் 19 ஆந் திகதி தாபிக்கப்பட்டதுடன் மீண்டும் 2007 நவம்பர் 01 ஆந் திகதி 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது. இதன்பொருட்டு கம்பனிக்கு PV 1008 என்ற பதிவு இலக்கம் வழங்கப்பட்டது.

கம்பனியினதும் அதனது துணைக் கம்பனிகளினதும் பிரதான செயற்பாடுகள்

கம்பனியின் முக்கிய செயற்பாடாகிய மின்சாரம் சம்பந்தமான வியாபாரச் செயற்பாடுகள் குறித்த ஆண்டு காலப்பகுதியில் மாற்றமின்றி அவ்வாறே காணப்பட்டன. கம்பனி இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மற்றும் அதனால் நிருவகிக்கப்படுகின்ற தேசிய மின்சார முறைமையிலிருந்து மின்சாரத்தை மொத்தமாக கொள்வனவு செய்து, கம்பனி நிருவகிக்கின்ற ஒரு நவீன மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையினூடாக மின்சார வாடிக்கையாளர்களுக்கு அதனைப் பகிர்ந்தளிக்கின்றது.

துணைக் கம்பனிகளும் அவற்றின் முக்கிய செயற்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

- **லெகோ ப்ரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிடட்**

  நாட்டில் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். இதன் செயற்பாடுகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

- **அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட்**

  இலங்கை மற்றும் ஏற்றுமதி சந்தையின் மின்சார மின்மானித் தேவையினை சமாளிப்பதற்காக எரிசக்தி மின்மானிகளின் உற்பத்தி வசதியினை பேணுதல்.

தூரநோக்கும் நீண்டகால இலக்குகளும்

குழுமத்தின் தூரநோக்கு, இலட்சியம் மற்றும் விழுமியங்கள் என்பன இந்த வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

பங்குதாரர்களின் தகவல்கள் மற்றும் பங்குரிமை வீதம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லெகோ இன் பங்குதாரர் நிலைமை வருமாறு.

பங்குதாரர் பெயர்	Share holding %
இலங்கை மின்சார சபை	54.84%
பொதுத் திறைசேரி	43.56%
நகர அபிவிருத்தி அதிகாரசபை	0.79%
மஹரகம பிரதேச சபை	0.48%
கொடிகாவத்த முல்லேரியா பிரதேச சபை	0.21%
பேலியகொட நகர சபை	0.11%
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபை	0.01%

பங்குதாரர்களை சமத்துவமாக நடாத்துதல்

பங்குதாரர்கள் அனைவரும் சமத்துவமாகவும் பக்கச்சார்பின்றியும் கவனிக்கப்படுவதை பனிப்பாளர் சபை எப்போதும் உறுதிப்படுத்துகின்றது.

பணிப்பாளர் சபையும் அதன் உள்ளடக்கமும்

► **லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட் இன் பணிப்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திரு. எம்.பி.ஏ.பி டி சில்வா	- தலைவர் (2020.01.17 முதல்)
திரு. என்.எஸ். இலங்ககோன்	- பணிப்பாளர் (2021.08.30 முதல்)
திரு. எச்.ஜி. சுமனசிங்ஹ	- பணிப்பாளர் (2021.08.23 முதல் 2022.01.28 வரை)
பொறி. எம்.ஆர். ரனதுங்க	- பணிப்பாளர் (2021.05.10 முதல்)
திரு. என்.பி.கே. ரணவீர	- பணிப்பாளர் (2020.02.12 முதல்)
திரு. எஸ்.பி.எம்.டபிள்யூ ஜெயவர்தன	- பணிப்பாளர் (2021.01.19 முதல்)
கலாநிதி ஐ.யூ.தெடிகம	- பணிப்பாளர் (2021.01.19 முதல்)

லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட் இன் பணிப்பாளர் சபையின் தற்போதைய உள்ளடக்கம்

திரு. எம்.பி.ஏ.பி டி சில்வா	- தலைவர்
திரு. என்.எஸ். இலங்ககோன்	- பணிப்பாளர்
கலாநிதி டி.சி.ஆர். அபேசேகர	- பணிப்பாளர் (2022.10.31 முதல்)
திரு. எச்.ஜி. சுமனசிங்ஹ	- பணிப்பாளர்
திரு. என்.பி.கே. ரணவீர	- பணிப்பாளர்
திரு. எஸ்.பி.எம்.டபிள்யூ ஜெயவர்தன	- பணிப்பாளர்
கலாநிதி ஐ.யூ.தெடிகம	- பணிப்பாளர்;

துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை

► **அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட் கம்பனியின் பணிப்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திரு. எம் பி ஏ பி சில்வா	- தலைவர் (2020.02.10 முதல்)
திரு லியு ஜியான்வு	- பணிப்பாளர் (2009.02.03 முதல்)
கலாநிதி பி எஸ் நரேந்திர தி சில்வா	- பணிப்பாளர் (2020.02.10 முதல்)
செல்வி யேயே லியு	- பணிப்பாளர் (2020.09.10 முதல்)

* திரு லியு ஜியான்வுவின் மாற்று பணிப்பாளராக செல்வி யேயே லியு காணப்படுகின்றார்.

மீளாய்வாண்டின் போது அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட் இன் பணிப்பாளர் சபையில் இடம்பெற்ற மாற்றம்.

திருமதி. ஏன்.டபிள்யு.கே. ஹேரத்	- பணிப்பாளர் (2021.02.03 முதல் 2021.08.22 வரை)

அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட் இன் தற்போதைய பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்:

திரு. எம் பி ஏ பி சில்வா	- தலைவர்
திரு லியு ஜியான்வு	- பணிப்பாளர்
கலாநிதி பி எஸ் நரேந்திர தி சில்வா	- பணிப்பாளர்
செல்வி யேயே லியு	- பணிப்பாளர்

* திரு லியு ஜியான்வுவின் மாற்று பணிப்பாளராக செல்வி யேயே லியு காணப்படுகின்றார்.

► **லெகோ ப்ரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிடட்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான லெகோ ப்ரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் இன் பணிப்பாளர்கள்.

தீரு. ஏழ் பீ ஏ பீ சீலுவுர்	- துஜலுவுர் (2020.02.10 முதலு)
தீரு. ஏஸ் ஏலு ஜேயுசேகுரு	- புணுீப்புர்ளுர் (2016.05.13 முதலு 2022.02.01 வுஜரு)

மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை.

லெகோ ப்ரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் இன் பணிப்பாளர் சபையின் தற்போதைய உள்ளடக்கம்

திரு. எம் பி ஏ பி சில்வா	- தலைவர்
திரு. எச் ஜி சுமணசிங்ஹ	- பணிப்பாளர் (31.01.2022 முதல்)
திரு. ஒய் எம் ஜெயரத்ன	- பணிப்பாளர் (31.01.2022 முதல்)
திரு. கே பி கே சிறிவர்தன	- பணிப்பாளர் (31.01.2022 முதல்)
திரு. எஸ் டி சி குணவர்தன	- பணிப்பாளர் (31.01.2022 முதல்)
திரு. ஏ டி ஏ சி ஐ பிரேமச்சந்திர	- பணிப்பாளர் (31.01.2022 முதல்)

பணிப்பாளர் ஊதியம்

பணிப்பாளர் ஊதியங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 7 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நன்கொடைகள்

கம்பனி மீளாய்வாண்டில் எவ்வித நன்கொடையையும் மேற்கொண்டிருக்கவில்லை.

பங்குதாரர்களின் பங்குரிமைத்துவம்

பணிப்பாளர்களில் எவரும் கம்பனியில்/குழுமத்தில் பங்குரிமைத்துவம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

ஆர்வவெளிப்படுத்தல் பதிவேடு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு ஆர்வவெளிப்படுத்தல் பதிவேடொன்றை கம்பனியும் துணைக்கம்பனிகளும் பராமரிக்கின்றன.

பணிப்பாளர்களின் ஆர்வம்

மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கம்பனியுடன் ஒப்பந்தமொன்றில் அல்லது தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்படுதல் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 28 இல் தரப்பட்டுள்ளன.

உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர்கள் அவர்களின் உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 28 இல் வெளிப்படுத்தியுள்ளனர்.

பணிப்பாளர் கூட்டங்கள்

மீளாய்வாண்டு காலப்பகுதியில் 10 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் பணிப்பாளர் சபையால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுற்றறிக்கை இடப்பட்டது.

நிதிக்கூற்றுக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பக்கங்கள் 44 முதல் 49 வரை தரப்பட்டுள்ளன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கம்பனிக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பக்கங்கள் 35 முதல் 43 வரை தரப்பட்டுள்ளன.

நிதிசார் மீளாய்வு

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 03 இல் தரப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களிற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

கம்பனியினதும் குழுமத்தினதும் விவகாரங்களை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்கள் ஆவர்.

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

கம்பனியினதும் குழுமத்தினதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று என்பன முறையே கம்பனியினதும் குழுமத்தினதும் நிதி நிலைமையினையும் நிதிச் செயலாற்றலையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பதாக பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றனர்.

வருமானம்

குழுமத்தின் வருமானம் ரூபா 33.64 பில்லியனாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உழைத்த வருமானத்தில் 6.2 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது.

மின்மானி விற்பனைகள் மற்றும் கைத்தொழில் மின்கட்டண வகுதியின் அதிகரிப்பே உழைத்த வருமானத்தின் அதிகரிப்புக்கு பிரதானமாக பங்களித்திருந்ததுடன், வர்த்தகம், வீதி விளக்குகள், மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் தற்காலிக மின் இணைப்புக்களிலிருந்து ஏற்பட்ட வருமானக் குறைவை இவை மிகைத்திருந்தன. வெவ்வேறு நுகர்வோர் வகைகளின் பங்களிப்புகளை அடையாளம் காணும் வகையிலான குழுமத்தின் வருவாய் தொடர்பான விரிவான பகுப்பாய்வு நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 04 இல் வழங்கப்பட்டுள்ளது. குழுமத்திற்கும் கம்பனிக்கும் இடையிலான வர்த்தகம் நியாயமான சந்தை விலையில் இடம்பெறுகின்றது.

செலவினம்

குழுமத்தின் மொத்த செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 5.52 பில்லியனிலிருந்து ரூபா 5.79 பில்லியனுக்கு அல்லது 4.96 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

இலாபம்

குழுமத்தின் மொத்த இலாப விகிதம் 23.48 சதவீதமாகப் பேணப்படுகின்றது. வரிக்கு முந்திய இலாபம் ரூபா 5.11 பில்லியனுக்கு அல்லது 110.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இலாபத்தில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்கு பிரதான காரணம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெஸ்ட் கோஸ் பவர் (பிரைவட்) லிமிடட் இன் முதலீட்டிலிருந்து கிடைத்திருந்த பங்கிலாபத்தின் அதிகரிப்பாகும்.

வரிக்கு பிந்திய இலாபம் ரூபா 1.46 பில்லியனால் அல்லது 80.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வரிவிதிப்பு

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வரி நோக்கத்திற்காக சீராக்கப்பட்ட கணக்கீட்டு இலாபத்தின் அடிப்படையில் வரிக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. அனைத்து செயற்பாட்டிலுள்ள கம்பனிகளும் 24 சதவீதம் வருமான வரி செலுத்துதல் வேண்டும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரிக்கு இடையிலான தற்காலிக வேறுபாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்கான அவற்றின் முன்னொண்டுசெல் தொகைகளின் அடிப்படையில் பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி அறிக்கையிடல் திகதி வரை பிற்போட்ட வரிப் பொறுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

பங்கிலாபம்

மீளாய்வாண்டின் போது எவ்வித பங்கிலாபக் கொடுப்பனவும் பிரேரிக்கப்படவில்லை.

2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக செலுத்திய ரூபா 500 மில்லியன் முதலாவதும் இறுதியுமான பங்கிலாபம் பக்கம் 500 இல் தரப்பட்டுள்ளது.

பங்கொன்றுக்கான உழைப்பு

அடிப்படை பங்கொன்றுக்கான உழைப்பு ஆண்டிற்கான தேறிய இலாபத்தை ஆண்டின் இறுதியில் கம்பனியின் பங்குதாரர்களின் கைவசமுள்ள நிறையளித்த பங்குகளின் எண்ணிக்கையினால் வகுத்து கணிப்பிடப்படுகின்றது. தயவுசெய்து நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 9 ஐப் பார்க்கவும்.

கூறப்பட்ட மூலதனம்

தயவுசெய்து நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 21.1 ஐப் பார்க்கவும்.

ஒதுக்கங்கள்

ஒதுக்கங்கள் மற்றும் மொத்த உரிமைத்துவத்தின் பொழிப்பு பின்வருமாறாகும்.

ரூபா'000	கூறப்பட்ட மூலதனம்	வருமான ஒதுக்கங்கள்	மீள்மதிப்பீட்டு மிகை	நியாயப் பெறுமதி ஒதுக்கம்	நிறுத்தி வைத்த உழைப்பு	கட்டுப்பாடற்ற வட்டி	மொத்த உரிமைத்துவம்
குழுமம்	1,145,067	340,642	2,182,788	9,616,104	25,464,897	155,841	38,905,339
கம்பனி	1,145,067	340,642	2,112,937	9,616,104	25,194,388	-	38,409,138

கடன்கள்

குறிப்பு 22 - இல் காட்டப்பட்டுள்ள வட்டி தாங்கும் கடன்கள் மற்றும் பெறுகைகள் தொகையான ரூபா 92.903 மில்லியன் குத்தகை பொறுப்பைத் தவிர்த்து கம்பனிக்கு அல்லது குழுமத்திற்கு நீண்ட கால கடன்கள் எதுவும் இல்லை.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

முன்னைய ஆண்டின் ரூபா 13.99 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுமத்தின் ஒன்றித்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன ரூபா 14.46 பில்லியன் தொகையாகும். கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூபா 13.68 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 14.18 பில்லியன் ஆகக் காணப்பட்டது.

நடைமுறைச் சொத்துக்கள்

முன்னைய ஆண்டின் ரூபா 21.32 பில்லியன் நடைமுறைச் சொத்துக்கு எதிராக 2021 இன் இறுதியிலான குழுமத்தின் மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 21.57 பில்லியன் தொகையாகும். கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூபா 20.74 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 20.67 பில்லியன் ஆகக் காணப்பட்டது.

நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கும் கம்பனியின் ஊழியர்களிற்குமான அனைத்து நியதிச்சட்டக் கடப்பாடுகளும் ஒன்றில் முழுமையாகச் செலுத்தப்பட்டு அல்லது நிதிக்கூற்றுக்களின் தேவையான அளவிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கு எட்டியவரையில் திருப்தியடைகின்றனர்.

ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்குத் தேவையான எந்தவொரு பொருண்மையான நிகழத்தக்க பொறுப்பும் காணப்படவில்லை. இருப்பினும், நாட்டின் பொருளாதாரத்தில் நிலவுகின்ற தற்போதைய பணவீக்கத்தின் தாக்கம் குறிப்பு 32 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

இலங்கையில் பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு முரணான எந்தவொரு செயற்பாடுகளிலும் குழுமம் ஈடுபட்டிருக்கவில்லை என பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவுக்கு எட்டியவரை நம்புகின்றனர்.

தீர்வுகாணப்படாத வழக்குகள்

கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள் நிதிக்கூற்றுக்களிற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்பதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர். நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் மூலதனச் செலவுக் கடப்பாடுகளுடன் தொடர்புடைய நிகழத்தக்கவைகளும் கடப்பாடுகளும் நிதிக்கூற்றுக்க ளிற்கான குறிப்புக்கள் 26 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ந்தியங்குதல்

எண்ணற்ற எதிர்காலத்திற்கு கம்பனியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களை கம்பனி வைத்துள்ளது என பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர். அதற்கமைய, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்குதல் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இடர் முகாமைத்துவம்

குழுமத்தினதும் கம்பனியினதும் கூட்டிணைந்த குறிக்கோள்கள் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் அவற்றின் இடர் முகாமைத்துவத்தினை தொடர்ச்சியாக மீளாய்வு செய்துள்ளனர். தயவுசெய்து நிதிசார் முதலீட்டு இடர் முகாமைத்துவக் குறிப்பு 29 ஐப் பார்வையிடவும்.

கணக்காய்வாளர்

குழுமத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 மற்றும் 20 ஆவது திருத்தங்களின் படி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி கம்பனியின் கணக்காய்வாளராக தொடர்ந்தும் செயற்படுகின்றார்.

கம்பனி	கணக்காய்வாளரின் பெயர் / வரி ஆலோசகர்	கொடுப்பனவு வகை	தொகை ரூபா
லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிடட்	தேசிய கணக்காய்வு அலுவலகம்	குணக்காய்வுக் கட்டணம்	2,700,000/= (ஏற்பாடு) (VAT நீங்கலாக)
அன்டெ லெகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட்	தேசிய கணக்காய்வு அலுவலகம்	குணக்காய்வுக் கட்டணம்	306,600/= (VAT நீங்கலாக)
லொகோ புரஜெக்ட் (பிரைவட்) லிமிடட்	தேசிய கணக்காய்வு அலுவலகம்	குணக்காய்வுக் கட்டணம்	108,000/= (VAT நீங்கலாக)

சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலிற்கு தீங்குவிளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.

தொழில் கொள்கைகள்

மிகப் பொருத்தமான ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்தல் என்பதனை குழுமம் தொழில் கொள்கையாகக் கொண்டுள்ளதுடன் அவர்களின் திறன்களையும் தகைமைகளையும் முன்னேற்றுவதற்கு தேவையான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன், பால், இன, மத பாகுபாடின்றி அனைவருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. ஊழியர்களின் சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஆண்டின் இறுதியிலுள்ளவாறு கம்பனி மற்றும் துணைக் கம்பனிகளில் காணப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1569 ஆகும்.

வருடாந்த பொதுக் கூட்டம்

வழமையான வணிகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கத்துடன் இல. 411, காலி வீதி, கொழும்பு 03, ஈ.எச். கூரே கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் அமைந்துள்ள கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் 2022 நவம்பர் 24 ஆந் திகதி 38 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

பணிப்பாளர் சபையின் சார்பாக வருடாந்த அறிக்கையில் தலைவர் மற்றும் பணிப்பாளரால் கையொப்பமிடப்படுகின்றது.

தலைவர் **பணிப்பாளர்**

பி.டபிள்யூ. கோர்பெரேட் செக்ரெடெரியல் (பிரைவட்) லிமிடட்,

செயலாளர்

2022 ஒக்தோபர் 31

கொழும்பு.


55%
Team members activity

4Decentralization

பரவலாக்கம்

அதிகரித்துள்ள கணனிமயப்படுத்திய மற்றும் தகவல்தொடர்பாடல் சக்தியுடன், ஸ்மார்ட் வாடிக்கையாளர்கள்/ சார்புதாரர்கள் மற்றும் வலைதளத்துடன் ஒருங்கிணைக்கப்படும் ஸ்மார்ட் சாதனங்களில் அதிவேக வளர்ச்சியை உலகம் கண்டுள்ளது. இது லெகோ இன் அன்றாட நடவடிக்கைகளின் செயலாற்றல், கண்காணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. ஸ்மார்ட் நுகர்வோர் கோரும் திருப்திகரமான சேவையை வழங்குவதற்காக, லெகோ எமது வலைதள செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத்தை தொழில் நியமங்களிற்கு இணையாக பரவலாக்கும்.

பொறியியல் பிரிவு

உலகளாவிய தொற்றுநோயின் சவால்கள் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்டுள்ள சிக்கலான சமூகப் பொருளாதார சூழலின் புரிந்துகொள்ள முடியாத தாக்கங்களுக்கு மத்தியில், பொறியியல் பிரிவானது அதன் எல்லைக்குட்பட்ட பிரிவிற்குள் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தித்திறனை அடைய கடினமாக உழைத்தது. பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் திணைக்களங்களான வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், திட்டமிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல் திணைக்களம், திட்டமிடல் திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆகியவை ஒரு உற்பத்தித்திறன் மிக்க ஆண்டை அடைந்துகொள்வதற்காக கடுமையாக உழைத்தன.

தொற்றுநோய் காரணமாக உலகளாவிய பொருள் விநியோகச் சங்கிலியின் கடுமையான விளைவுகளுக்கு மத்தியில், கொள்வனவுக் கிளைக்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 3.4 பில்லியன் பெறுமதியான மொத்தமாக 530 கொள்வனவுகளைக் கையாள முடிந்திருந்தது.

சிவில் பொறியியல் திணைக்களம் அதன் குறிப்பிடத்தக்க பணிகளில் ஒன்றான லெகோ தலைமை அலுவலக கட்டிடத்தின் கட்டுமானப் பணியை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அனைத்து கட்டிடக்கலை, கட்டமைப்பு, மின்சாரம், இயந்திரம், பிளம்பிங் மற்றும் பிற துணை சேவை வரைபடங்கள் பணிக்காலத்திற்குள் பூரணப்படுத்தப்பட்டு 2021 மே இல் கொள்வனவுகள் ஆரம்பிக்கப்பட்டன. 2021 செப்டம்பர் அன்று ஸ்ரீபாலி கான்ட்ராக்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் அடிக்கல் நாட்டும் விழா 2021 அக்டோபர் இல் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அடிக்கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 06% பைலிங் வேலைகள் முடிக்கப்பட்டதுடன், இது செயற்திட்டத்தின் விரைவான முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. அதற்கு மேலதிகமாக சி.எஸ்.சி நுகேகொட, சி.எஸ்.சி தலுகம, சி.எஸ்.சி கெசல்வத்த மற்றும் சி.எஸ்.சி நீர்கொழும்பு ஆகியவற்றின் நிர்மாணத்திற்கான கொள்முதல் செயல்முறைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையின் முதல் கட்டம் கட்டப்பட்ட மைக்ரோகிரிட்டின் நிர்மாணப் பணிகள் ஒரு வருடத்திற்குள் நிறைவடைந்ததுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்ப விழாவிற்கும் தளம் தயாராகிவிட்டது. இதை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் திறந்து வைத்தார். இந்தத் திட்டத்துடன், ஸ்மார்ட் கிரிட் ஆராய்ச்சி ஆய்வகமும் உருவாக்கப்பட்டதுடன் வணிக மைக்ரோகிரிட் மற்றும் ஆய்வகம் ஆகிய இரண்டிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்டது.

லெகோ தொழில்நுட்பப் பயிற்சி மையம் 2021 இல் மொத்தம் 738 ஊழியர்களுக்கு 54 பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்தப் பயிற்சிகள் புதிய பணியமர்த்தப்பட்ட பொறியாளர்கள், வாடிக்கையாளர் சேவை கண்காணிப்பாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் பிற நிர்வாகிகள் உட்பட அமைப்பின் பெரும்பாலான படிநிலை மட்டங்களை ஊடுருவி பரந்த அளவிலான பரப்புகளை உள்ளடக்கியிருந்தது. தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக ஆண்டு முழுவதும் நிலவும் கட்டுப்பாட்டு நிலைமைகள் காணப்பட்டமையால் அவர்களால் ஆண்டு இலக்கை அடைய முடியவில்லை.

2021 ஆம் ஆண்டு செயற்திட்டத் திணைக்களத்திற்கு மிகவும் கடினமான ஆண்டாக இருந்தது, ஏனெனில் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இறுதி வரை விரிவான கண்காணிப்பின் கீழ் வேலை செய்ய வேண்டிய நிலை இத்திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்தது. தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு குறைந்த பட்ச விநியோக துண்டிப்புகளுடன், கட்டுமானப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்த அறிமுகமில்லாத சவால்களிற்கு மத்தியில் செயற்திட்டத் திணைக்களத்தால் ரூபா 760 மில்லியனுக்கும் அதிகமான வலைதள கட்டுமானச் செயற்திட்டங்களைத் தொடங்க முடிந்திருந்ததுடன் அவற்றுள் ரூபா 320 மில்லியன் பெறுமதியான பணிகள் பூரணப்படுத்தப்பட்டன.

நாடடைப்பு நிலைமைகள் காணப்பட்ட போதிலும், கம்பனியின் வருமானத்தில் ஏறத்தாழ 40% இற்கு பங்களிக்கும் லெகோ இன் 400 மொத்தப் பாவனையாளர்களின் பரிசோதனைகள் பரிசோதனைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது.

வினைத்திறனை அதிகரிப்பதற்கும் செயற்பாட்டுச் செலவைக் குறைப்பதற்கும் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் நிர்வாகச் செயலாக்கங்களை பரிசோதிப்பதில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மொரட்டுவக் கிளையானது மாதிரிக் கிளையாக மாற்றப்பட்டது. மாதிரிக் கிளையின் அனைத்து செயல்பாட்டுப் பணிகளும், மேலதிக பொது

முகாமையாளர் பொறியியல் அவர்களின் கீழுள்ள மாதிரிக் கிளை நிறைவேற்றுக் குழுவின் (MBEC) கட்டுப்பாட்டின் கீழ் இயக்கப்படுகிறது. லெகோ இன் வழமையான நடைமுறைகளுக்கு பல்வேறு புதிய செயல்பாட்டு திறன் மேம்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த செயற்திட்டம் வெற்றிகரமாக முன்னேறி வருகிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், மொரட்டுவ கிளையானது அதன் பௌதீக தோற்றத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அறிமுகப்படுத்தியிருந்ததுடன், முக்கியமாக வேலை/பணிச் சூழலின் அழகியல் தோற்றத்தை மேம்படுத்துதல், உற்பத்திச் சூழலை மேம்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றமை உள்ளூர் சமூகங்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

மூலாதார இயலளவு வழங்கல் அதாவது குறிப்பாக அதிக இயலளவு கொண்ட ஸ்பாட் லோட்களை வழங்குதல் என்பது சமீப காலத்தில லெகோ எதிர்கொண்ட ஒரு பெரிய பிரச்சினையாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் விநியோகக் கட்டமைப்பு நம்பகத்தன்மையை வலுப்படுத்துதல் செயற்திட்டம் தொடங்கப்பட்டதன் மூலம், லெகோ இன் வலையமைப்புக் கட்டமைப்பு கணிசமாக மாற்றப்பட்டதுடன் 33kV விநியோக மின்னழுத்த எண்ணக்கரு பரீட்சார்த்த ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த எண்ணக்கருவை உணர்ந்து, 33kV உட்செலுத்துதல் புள்ளிகள் மற்றும் PSS ஐ லெகோ விடம் ஒப்படைப்பதற்கான ஒரு திட்ட வரைபடம் லெகோ இன் பங்களிப்புடன் இலங்கை மின்சார சபையால் உருவாக்கப்பட்டது. இந்த மின்னழுத்த அளவை லெகோ இன் வலைதளத்தில் அறிமுகப்படுத்துவதன் மூலம் இடைநிலை மின்னழுத்த மாற்றங்களுக்கு செலவிடப்படும் கணிசமான அளவு பணம் சேமிக்கப்படும் என்று மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார விநியோக வலையமைப்பின் நம்பகத்தன்மை என்பது குறிப்பிட்ட கட்டமைப்பின் இயலளவின் மூலம் அதன் நுகர்வோருக்கு போதுமான, நிலைபேறான மற்றும் நம்பகரமான விநியோகத்தை வழங்குவதற்கான திறனைக் குறிக்கிறது. மின்சாரம் மற்றும் மின்தடையின் அதிர்வெண், காலம், சக்தி போன்றவற்றின் மூலம் நம்பகத்தன்மையின் அளவை அளவிட முடியும். திட்டமிடல் கிளை அவர்களின் திட்டமிடல் பணிகளில் நம்பகத்தன்மை அடிப்படையிலான திட்டமிடல் அளவுகோல்களை அறிமுகப்படுத்தியதுடன் அதன் அடுத்த திட்டமிடலானது 11kv வலைதளத் திட்டமாக காணப்படுவதுடன் அதனைத் திட்டமிடும் போது குறிப்பிட்ட ∴பீடர்களின் நம்பகத்தன்மை ஒரு முக்கியமான விடயமாக காணப்படும்.

செயற்பாட்டுப் பிரிவு

கோவிட் -19 தொற்றுநோய் சவால்கள் காணப்பட்ட போதிலும், செயற்பாட்டுப் பிரிவுக்கு 2021 ஆண்டு வெற்றிகரமாக ஆண்டாக இருந்தது. தொற்று நோயின் தாக்கத்தினால் நாடு சிரமங்களை எதிர்கொண்டிருந்த போதிலும், லெகோ தனது 606,202 வாடிக்கையாளர்களுக்கு கோட்டே, களனி, மொரட்டுவ, காலி, களுத்துறை, நீர்கொழும்பு மற்றும் நுகேகொட ஆகிய ஏழு கிளை வலையமைப்புகள் மூலம் 1,600 GWh சேவையை பெரும் முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் வழங்கியிருந்தது. இந்த தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக தொழிற்சாலைகள், ஹோட்டல்கள் போன்றவற்றை மூடப்பட்டிருந்த போதிலும் மொத்த விற்பனை சிறிய அளவில் பாதிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் 4.49 சதவீத இழப்பை பேணுவதற்கு லெகோவிற்கு முடிந்தது.

ஒவ்வொரு கிளையினதும் பாவனையாளர் கலவை (கட்டண ரீதியாக) கீழே சித்தரிக்கப்பட்டுள்ளது.


கட்டண வகை	நீர்கொழும்பு	களனிய	கோட்டே	நுகேகொட	மொரட்டுவ	களுத்துறை	காலி	மொத்தம்
வீட்டுப் பாவனை	47,117	84,343	67,551	69,237	85,814	78,018	65,536	497,616
மதவழிபாட்டுத் தளங்கள்	217	425	264	291	469	535	474	2,675
பொது நோக்கம் மற்றும் அரசாங்கம்	13,060	17,103	9,592	15,164	14,473	15,206	14,236	98834
கைத்தொழில்	212	650	191	324	1,523	198	317	3415
ஹோட்டேல்கள்	14	1	0	0	4	34	26	79
வீதி விளக்குகள்	418	787	248	8	536	1,267	319	3583
மொத்தம்	**61,038**	**103,309**	**77846**	**85024**	**102819**	**95258**	**80,908**	**606,202**

வருடாந்த நுகர்வு 2021 (MWh)

கட்டண முறைக்கமைய வருடாந்த நுகர்வு (MWh) கீழே தரப்படுகின்றது,

கட்டண வகை	வருடாந்த நுகர்வு (மறுா)
வீட்டுப் பாவனை	704,538
மதவழிபாட்டுத் தளங்கள்	10,291
பொது நோக்கம் மற்றும் அரசாங்கம்	512,152
கைத்தொழில்	305,730
ஹோட்டேல்கள்	45,033
வீதி விளக்குகள்	22,974
மொத்தம்	**1,600,718**

வருடாந்திர நுகர்வு 2021 (MWh)



லெகோவின் விநியோக முறைமைச் சொத்து 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு லெகோவின் விநியோக முறைமைச் சொத்து பின்வருமாறாகும்.


சொத்து வகை	அலகு	அளவு/ எண்ணிக்கை
11kV HV OH Lines	km	1025
11kV HV UG Cables	km	73
LV ABC வழிகள்	km	4445
உப மின்நிலையங்கள்	எண்ணிக்கை	4352
ஆளிகள் (LBS & LBC)	எண்ணிக்கை	1183
தன்னியக்க ரிக்லோசஸ்	எண்ணிக்கை	42

முறைமை நம்பகத்தன்மை

எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தடையில்லா மின்சாரம் வழங்குவதே எங்களது முக்கிய இலக்காகும். நாடடைப்பு நிலைமை காரணமாக இந்த தொற்றுநோய் சூழ்நிலை குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. எமது 11 kV மின்கடத்தல் வழிகளில் பெரும்பாலானவை வெறும் கடத்திகளைப் பயன்படுத்தி கட்டப்பட்டவை. எனவே, விலங்குகளின் தொந்தரவு மின் தடங்கல்கள் அடிக்கடி இடம்பெறுவதற்கான காரணமாக அமைந்துள்ளது. எமது ஊழியர்கள் கோவிட் 19 பாதிப்பிற்கு மத்தியிலும் தடையில்லா சேவையை வழங்குவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் இத்தனை பிரச்சனைகளுக்கு மத்தியிலும் 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த மின்தடையினை (SAIDI) 62.7 மணிநேரம்/நுகர்வோர் ஆக பராமரிக்க எமக்கு முடிந்தது.

வகுதி	SAIDI 2021 மணிநேரம்/நுகர்வோர
LV தடங்கல்	0.58
11 kV லெகோ திட்டமிடப்பட்ட	11.19
11 kV லெகோ தடங்கல்	16.18
11 kV இ.மி.ச. திட்டமிடப்பட்ட	4.34
11 kV இ.மி.ச. தடங்கல்	1.28
33 kV திட்டமிடப்பட்ட	14.51
33 kV தடங்கல்	14.61
மொத்தம்	**62.69**

SAIDI மணிநேரம்/நுகர்வோர்



வாடிக்கையாளர் சேவைகள்

கோவிட்-19 தொற்றுநோய் பாதிப்புகள் தொடர்ந்து செயல்படு நிலையில் காணப்பட்டமையால் 2021 ஆம் ஆண்டு வாடிக்கையாளர் சேவைக்கு மற்றொரு சவாலான ஆண்டாகும். வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவையை தொடர்வதற்கான சவால்களிற்கு மத்தியிலும் இதனைத் தொடரவேண்டிய நிலை காணப்பட்டது. இந்த சிரமங்களை எதிர்கொள்வதில் புதிய டிஜிட்டல் பயன்பாடுகளின் அறிமுகம் மிகவும் நிவாரணமாக இருந்தது. லெகோ இடமிருந்து தேவைப்படுகின்ற எந்தவொரு சேவைக்கும் விண்ணப்ப செயல்முறைக்கான ஆன்லைன் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவே இலத்திரனியல் விண்ணப்பித்தல் செயல்முறையாகும். இந்தச் சேவையின் ஊடாக வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான எந்தச் சேவைக்கும் மிக எளிதாகவும் விரைவாகவும் விண்ணப்பிக்க முடியும்.

2021 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சேவை உத்தரவாதங்கள்,

சேவை உத்தரவாதம்	% அடைவு
10 வேலை நாட்களின் போதான மதிப்-டப்பட்ட விநியோகம்	82
புணம் செலுத்திய பின்னர் 10 வேலை நாட்களில் வழங்கப்பட்ட புதிய இணைப்பு	90
30±3 நாட்களிற்கான மின் பட்டியலிடல் திறன்	95

தொலைவிலிருந்து மீட்டரை வாசிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட இ-பில்லிங் சேவையின் மூலம் பட்டியலிடல் செயலாற்றலை மேம்படுத்த முடிந்தது.

கோவிட்-19 விளைவு காரணமாக வாடிக்கையாளர்களின் நிலையை கருத்தில் கொண்டு, நுகர்வோருக்கு நிவாரண நடவடிக்கையாக இந்த ஆண்டில் மின்பட்டியல் செலுத்தப்படாத துண்டிப்பு நடத்தப்படவில்லை.

லெகோ இன் கள வாகனங்களை சமூகம் அடையாளம் காண உதவும் விதத்தில் லெகோ இன் இலச்சினை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவும் வாடிக்கையாளர்களுக்கு விரைவாகவும் வினைத்திறனாகவும் சேவை செய்யும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது.



நுகர்வோர் ஆலோசனை கூட்டம்

வாடிக்கையாளர் சேவைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த முக்கிய நிகழ்வுகளில் ஒன்று நுகர்வோர் ஆலோசனைக் கூட்டமாகும், மேலும் இதனை 2021 ஆம் ஆண்டில் கூட்டுவதற்கு கட்டுப்பாடுகள் காணப்பட்ட போதிலும் அது வெற்றிகரமாக நடத்தப்பட்டது. சூம் (நிகழ்நிலை) தொழில்நுட்பத்தின் மூலம் மொரட்டுவை கிளையில் உள்ள வாடிக்கையாளர்களுக்காக இது நடத்தப்பட்டது. அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களுடன் வாடிக்கையாளர் உற்சாகம் இதன்போது காணப்பட்டது. டுநுஊழு நிர்வாகத்தால் பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டு பதில் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சோலார் (சூரியமின்வலு) தொடர்பான பிரச்சனைகளுக்கு உதவி மையச் செயல்பாட்டின் முக்கியத்துவம் குறித்து வெளிப்படுத்தப்பட்டதுடன் அதை செயல்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. குலுக்கல் சீட்டிழுப்பு நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன.





மனித வளம் மற்றும் நிர்வாகம்


மனித வளம் என்பது ஒரு நிறுவனத்திலுள்ள மிகவும் பெறுமதிமிக்க மற்றும் முக்கியமான சொத்தாகும். எனவே, பணியாளர்களை நிர்வகிப்பதிலும் மேற்பார்வை செய்வதிலும் மனிதவளத் திணைக்களம் முக்கிய பங்கை வகிக்கின்றது. மனிதவளத் திணைக்களத்தின் இறுதி இலக்கு, பணியாளர்கள் மூலம் நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதை உறுதி செய்யும் அதே வேளை, ஊழியர்களின் சமமாகவும் நியாயமாகவும் நடாத்தப்படுவதை உறுதி செய்வதாகும்.

ஊழியர் கோப்பு மீதான மேலோட்டம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 189 நிறைவேற்றுத் தர மற்றும் 1282 நிறைவேற்றுத் தரமற்ற ஊழியர் கோப்புடன் கூடிய மொத்தம் 1471 ஊழியர் படையை லெகோ வைத்திருந்தது. 2021 ஆம் ஆண்டிலும் திருப்தியான வேலைப்படையுடன் கூடிய அதிகூடிய ஊழியர் நிறுத்திவைத்தலை பேணுவதற்கு லெகோவிற்கு முடிந்திருந்தது.

கீழே உள்ள வரைபடம் கொழும்பு 03 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகம் உட்பட ஏழு கிளைகளில் (நீர்கொழும்பு முதல் காலி வரை) அமைந்துள்ள பணியாளர்களின் முறிவு பற்றியதாகும்.

பதவியணி பரம்பல் (கிளை ரீதியாக)



ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ஒரு புகழ்பெற்ற நிறுவனம் என்ற வகையில் நாம் தொடர்ந்து ஊழியர்களின் மேம்பாடு பற்றி சிந்திக்கிறோம். எனவே, தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப சரியான நேரத்தில் பணியாளர்களை மேம்படுத்துவதிலும் புதுப்பிப்பதிலும் எங்கள் பயிற்சித் திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேற்கூறியவற்றை நிரூபிக்கும் வகையில், எமது தொழில்நுட்ப வல்லுனர்களின் திறன்களை அபிவிருத்தி செய்து அவர்களது தகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழான தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழை (NVQ) பெற்றுக்கொள்தல் ஆகிய குறிக்கோள்களுடன் தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் (VTA) இணைந்து 2021 ஒக்டோபர் 05 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கம்பனி கையெழுத்திட்டது. அதன்படி, எங்கள் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு NVQ 4 தகுதியையும், எங்கள் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு NVQ 3 தகுதியையும் வழங்குவதற்கான திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுகிறது.

2021 ஆம் ஆண்டில் மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துகையில், பட்டியலிடப்பட்ட திட்டத்தின்படி பிற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நிகழ்நிலை மற்றும் பௌதீக அடிப்படையில் நடத்த முடிந்தது.

ஊழியர் வெகுமதிகள், பாராட்டுகள் மற்றும் நலனோம்பல் செற்பாடுகள்

பணியாளர் வெகுமதிகள் மற்றும் கௌரவித்தல்கள் என்பது ஊக்குவிக்கப்பட்ட பணியாளர்களைத் தக்கவைப்பதற்கு எந்தவொரு நிறுவனத்திற்கும் முக்கியமான தேவையாகும். எமது ஊழியர்களின் பெறுமதியை நன்கறிந்த நிறுவனம் என்ற வகையில், நாம் பல்வேறு நிதி மற்றும் நிதி சாராத நலன்களை வழங்குகி வருகின்றோம்.

கோவிட்-19 தடுப்புக்கான உதவியாக, 2021 ஆம் ஆண்டிலும் தொற்றுநோய்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஊழியர்களுக்கும் பாதுகாப்பு உதவிகளை வழங்கினோம்.

மேலும், 2021 ஆம் ஆண்டில் லெகோ இன் 38வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டதுடன் ஒவ்வொரு பணியாளருக்கும் ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தமாக ஒரு பரிசுப் பொதியும் டி-சர்ட் ஒன்றும் வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், எமது அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் ஆதரவுடன் தொற்றுநோய் சூழ்நிலைக்கு மத்தியிலும் எமது செயல்பாடுகள் மற்றும் பணியாளர் வசதிகளை திறம்பட நிர்வகிக்க எமக்கு முடிந்திருந்தது.

நிதிசார் மீளாய்வு

லங்கா மின்சார கம்பனி (பிரைவேட்) லிமிடெட் (லெகோ), கடந்த ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டில் எதிர்பார்த்தபடி, குறிப்பிடத்தக்க முன்னேற்றமான செயலாற்றைக் காண்பித்ததுடன், 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொற்றுநோய் தொடங்கியதில் இருந்து தொடர்ச்சியான அடிப்படையில் ஸ்தம்பிதமடைந்து அதன்பின்னர் "இயல்பு" நிலைக்குத் திரும்பிய செயல்பாடுகள் மற்றும் நுகர்வோர் போக்குகள் காரணமாக எமது செயல்பாடுகளின் செயலாற்றல் ஆனது கோவிட்-19க்கு முன்னைய நிலைகளை எட்டியிருந்தது. இந்த நேர்மறையான வேகம் குழுமத்தின் இலாபத்தில் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

2020 ஆம் ஆண்டின் ரூபா 31.68 பில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2021 இல் லெகோ ரூபா 33.64 பில்லியன் ஒருங்கிணைந்த வருமானத்தை பதிவுசெய்திருந்ததுடன் அது 6.21 சதவீத அதிகரிப்பாகும். மின்மானி விற்பனைகள் மற்றும் கைத்தொழில் மின்கட்டண வகுதியின் அதிகரிப்பே உழைத்த வருமானத்தின் அதிகரிப்புக்கு பிரதானமாக பங்களித்திருந்ததுடன், வர்த்தகம், வீதி விளக்குகள், மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் தற்காலிக மின் இணைப்புக்களிலிருந்து ஏற்பட்ட வருமானக் குறைவை இவை மிகைத்திருந்தன.

பல்வேறு நுகர்வோர் வகுதிகளின் கீழான நுகர்வோரின் கொடுப்பனவுகளில் ஆண்டு முழுவதும் நிலவிய ஓரளவு நேர்மறையான போக்குக்கு மத்தியில் விற்பனைக்கான வியாபார பெறவேண்டியவை மீதான விகிதமானது முன்னைய ஆண்டில் நிலவிய 18.23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 20.15 சதவீதமான அதிகரிப்பைக் காண்பித்தது. 2020 இல் காணப்பட்ட ரூபா 5.8 பில்லியன் நுகர்வோர் கடன்பட்டோருடன் ஒப்பிடும்போது நடப்பாண்டில் அது ரூபா 6.8 பில்லியனாக இருந்ததுடன் 2020 உடன் ஒப்பிடும்போது இது 17.36 சதவீத அதிகரிப்பாகும்.

2020 இல் ரூபா 1.8 பில்லியனாக காணப்பட்ட தேறிய இலாபத்தை ரூபா 3.3 பில்லியனாக அடைந்துகொள்ள எமக்கு முடிந்திருந்ததுடன், 2020 இல் ரூபா 1.5 பில்லியனாக இருந்த செயற்பாட்டு இலாபத்தை 2021 இல் ரூபா 4.4 பில்லியனாக பதிவுசெய்திருந்தோம்.

லெகோ இல் உள்ள வலுவான ஆளுகைப் பொறிமுறையானது, பல்வேறு ஆர்வத் தரப்பினர்களிற்கு பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கும், ஒருங்கிணைந்த வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தி, நியாயமான எண்ணம் மற்றும் நிலைபேறான பெறுமதியை உருவாக்குதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த பிரகாசத்தில் நின்று, குழுமமானது நல்லாளுகைக்கான சிறந்த நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதுடன், அதன் தயார்நிலையின் அளவையும், உருவாகும் வெளிச் சவால்களையும் எதிர்கொண்டு நிர்வகிப்பதற்கான திறனையும் பெற்றுள்ளது.


செயலாற்றல் குறிகாட்டிகள்

கடந்த ஐந்து ஆண்டுகளின் போதான செயலாற்றல் குறிகாட்டிகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.


ரூபா பில்.	2017	2018	2019	2020	2021
வருமானம்	30.57	31.83	33.71	31.68	33.64
மொத்த இலாபம்	6.18	4.93	5.38	6.18	7.90
தேறிய இலாபம்	1.84	2.94	2.74	1.82	3.29
விற்பனைகள் KWh	1,519	1,570	1,570	1,624	1,603
கொள்வனவுகள் KWh	1,597	1,640	1,640	1,606	1,633
ஏரிசக்தி இழப்பு %	2.7	1.61	1.61	-1.37	1.94

நிதிசார் செயலாற்றலின் வரைபட ரீதியான சமர்ப்பணங்கள் கீழே தரப்படுகின்றன.


வருமான வளர்ச்சி



செயற்பாட்டு இலாபம்



தேறிய இலாபம்




உரிமைத்துவம் மீதான திரும்பல்

மீளாய்வாண்டிற்கான குழுமத்தின் உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் 8.87 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை கம்பனியின் உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் 8.83 சதவீதமாகக் காணப்பட்டது. ஆண்டிற்கான இலாபத்தினை ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்பட்ட மொத்த சராசரி உரிமை மூலதனத்தினால் வகுத்து உரிமை மூலதனம் மீதான திரும்பல் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் கணிக்கப்படுகின்றது.

சொத்துக்களின் உள்ளடக்கம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 53.436 பில்லியனாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களானது மொத்தச் சொத்துக்களில் 59.6 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. சொத்துக்களின் உள்ளடக்கத்தின் வரைபட ரீதியான முன்வைத்தல் கீழே தரப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (ஆபொஉ) ரூபா 14.46 பில்லியன், வெஸ்ட் காஸ்ட் லங்கா லிமிடட் இல் ரூபா 11.8 பில்லியன் முதலீடு மற்றும் ரெபோ/நிலையான வைப்புக்கள், ஊழியர்களுக்கு வழங்கிய கடன்கள் போன்ற குறுங்கால நிதிச் சொத்துக்களின் மீதான ரூபா 14.7 பில்லியன் முதலீடுகளை குழுமத்தின் மொத்தச் சொத்துக்களின் கூறுகள் பிரதிநிதித்துவம் செய்கின்றன.



காசுப் பாய்ச்சல்

முன்னைய ஆண்டின் ரூபா 6,309 மில்லியன் காசு வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் குழுமத்தின் தேறிய செயற்பாட்டுக் காசு உட்பாய்ச்சல் ரூபா 3,111 மில்லியனாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டில் இ.மி.ச. இடமிருந்து குறிப்பிடத்தக்களவு தொகையான குறுங்காலக் கடன்கள் கிடைத்திருந்தமை மற்றும் அட்டுறு வட்டியின் மீள் கொடுப்பனவுகள் காரணமாக செயற்பாட்டு காசுப் பாய்ச்சலில் நேர்மறையான காசுப் பாய்ச்சல் ஏற்பட்டிருந்தது.

பங்கு உரிமையாளர் திரும்பல்கள்

குழுமத்தின் மீளாய்வாண்டிற்கான பங்கொன்றுக்கான உழைப்பு ரூபா 28.56 ஆனதுடன் அது 2020 ஆம் ஆண்டில் ரூபா 15.87 ஆகும். கம்பனியின் மீளாய்வாண்டிற்கான பங்கொன்றுக்கான உழைப்பு ரூபா 28.23 ஆனதுடன் அது 2020 ஆம் ஆண்டில் ரூபா 15.65 ஆகும்.

கூட்டிணைந்த ஆளுகை


கூட்டிணைந்த ஆளுகைக்காக தாபிக்கப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகளை குழுமம்/கம்பனி பின்பற்றுகின்றது என உறுதிப்படுத்தப்படுவதுடன் அவற்றின் வணிகத்தை நடாத்துகையில் உயர் ஒழுக்க நியமங்களும் உறுதிசெய்யப்படுகின்றன.

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRs/LKASs), மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் மீது பணிப்பாளர் சபை சார்பாக தலைவரும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

4Democratization

சனநாயகமயமாக்கல்

மின்சார பயன்பாட்டு நிலப்பரப்பானது ஒரு பெருநிறுவன, மையப்படுத்தப்பட்ட அமைப்பிலிருந்து வியத்தகு முறையில் பொது மக்களால் பங்களிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்படும் முறையொன்றாக மாறிவருகின்றது. இந்த கட்டமைப்புகள் சுற்றுச்சூழல் நட்பு மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு உதவுவதடன் சமூகத்தின் நல்வாழ்வுக்கும் பங்களிக்கின்றன. பொது மக்களுக்கு அதிக வாய்ப்புகள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற அதே வேளை, இந்த மாற்றத்தை மிகவும் சனநாயக ரீதியான, சமத்துவமான மற்றும் நிலைபேறான வழியில் உலகம் கோருகிறது. லெகோ அதன் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகத்தை அதிக நுகர்வோர் மையமாக மாற்றும் அதே வேளை அதன் சனநாயகமயமாக்கல் செயல்முறையை துரிதப்படுத்துகிறது.



உள்ளக கணக்காய்வுத் திணைக்களம்

முகாமைத்துவ மீளாய்வு

உள்ளக கணக்காய்வுத் திணைக்களமானது கம்பனி முழுவதிலும் உரிய செயற்பாட்டு மற்றும் கணக்கீட்டுச் செயல்முறைகளுடன் சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டுச் சூழல் ஒன்றை பராமரிப்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன் நிறுவப்பட்டதுடன் பல்வேறு வகையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு கம்பனி வழங்கிய தகவல்களின் நம்பகத்தன்மையையும் இத்திணைக்களம் பராமரிக்கிறது.

உள்ளக கணக்காய்வுத் திணைக்களமானது, நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின் பொறியியல் போன்ற பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற மற்றும் தொழில்ரீதியாகத் தகுதி பெற்ற பணியாளர்களைக் கொண்டுள்ளது. வருடத்தின் தொடக்கத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (AMC) அங்கீகரித்த "உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்" படி, அந்தந்த கணக்காய்வுப் பணிகளுக்கு ஏற்ப, ஒதுக்கப்பட்டுள்ள குழுக்கள் தேவையான தொழில்முறை திறன்களைக் கொண்டிருக்கின்றன.

"உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை" தயாரிக்கையில் கம்பனி அதன் செயல்பாடுகளைச் செய்யும்போது எதிர்கொள்கின்ற, முக்கியமாக தற்போதுள்ள இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளதுடன்; கம்பனியின் பிரிவுகள், திணைக்களங்கள், கிளைகள், வாடிக்கையாளர் சேவை மையங்கள் மற்றும் களஞ்சியங்கள் போன்றவை உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளிலும் இக்கணக்காய்வு மேற்கொள்ளப்படும்.

மீளாய்வாண்டில், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அனைத்துப் பரப்புகளையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தி, அவர்களின் கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்து பல்வேறுபட்ட முகாமைத்துவ மட்டங்களுடன் விவாதித்திருந்ததுடன், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்தியிருந்தது. எந்தவொரு கொள்கை தீர்மான மாற்றங்களை செய்வதற்கும் /ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும் தலைவருடன் மீளாய்வுக் குழுக் கூட்டங்களை உள்ளக கணக்காய்வுப் பரிவு நடத்தியது.

நல்லாளுகை 2021

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கம்பனியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபையில் திறைசேரிப் பிரதிநிதியாக உள்ள அங்கத்தவரின் தலைமையின் கீழ் 3 பணிப்பாளர் சபை உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. கம்பனிச் செயற்பாடுகளின் தரத்தினை முன்னேற்றுதல், தெளிவு, வெளிப்படையான தன்மை மற்றும் நல்லாளுகையினை மேம்படுத்துவதற்கான நோக்குடன் அதன் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. மேலும் எமது வரிசை அமைச்சிலிருந்து இரண்டு பிரதிநிதிகளும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்து ஒரு பிரதிநிதியும் அவதானிப்பாளர்களாக இக்குழுவில் பங்கேற்கின்றனர்.

மீளாய்வாண்டு காலத்தில் அவ்வாறான நான்கு பயனுள்ள கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

லெகோவின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளிற்கு மேலதிகமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வுப் பிரிவொன்றும் தொழிற்படுகின்றது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. PWR/C/LECO/01/21/18 මඟේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 28 October 2022

தலைவர்
லங்கா மின்சாரக் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்

லங்கா மின்சாரக் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா மின்சாரக் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் (“கம்பனி”) மற்றும் அதன் துணைக் கம்பனிகள் (“குழுமம்”) ஆகியவற்றின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் படியான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனி மற்றும் குழுமத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மின்சார சபை (CEB) இடமிருந்து நானாவித சேவைகளுக்காக பெறப்பட வேண்டிய மீதி ரூபா 1,343,821,164 ஆனதுடன் இதில் நிகர கணக்கீடு மற்றும் நிகர பிளஸ் முறைகளைப் பயன்படுத்தி CEB ஆல் 2017, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட எரிசக்தி கிரயமான ரூபா 1,336,859,095 உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், அந்தத் தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைத்திருக் கவில்லை. மேலும், CEB அதன் நிதிக் கூற்றுக்களில் இந்தப் பொறுப்பை அங்கீகரித்திருக்கவில்லை.

(ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிராட் பேண்ட் நெட்வொர்க் (பிரைவேட்) லிமிடெட்டின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 5,000,000 தொகைக்கான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) நிராகரிக்கப்பட்ட கணக்கிலிருந்து மாற்றப்பட்டிருந்த வாடிக்கையாளர் களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இனங்காணப்படாத ரூபா 14,731,287 தொகையான சேகரிப்புகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை மின்சார சபைக்கும் (CEB) கம்பனிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) இலங்கை மின்சார சபையின் ஆரம்ப துணை மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்திய காணிகள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 206,924,712 தொகையானது CEB யிடமிருந்து பெற வேண்டிய மீதியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் காணிகளில் முதன்மை துணை மின் நிலையங்களை அமைப்பதற்கும் மேற்கூறிய காணிகள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்தியமைக்காக CEB ஆல் செலுத்த வேண்டிய கட்டணங்கள் தொடர்பாகவும் கம்பனிக்கும் CEB க்கும் இடையில் முறையான உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(ஊ) 2021 நவம்பர் 16 ஆந் தேதியிட்ட PED/01/2021 ஆம் இலக்க அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 6.9 இன் படி, பதவழிப்பதற்காக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையளித்தல் உள்ளிட்ட உரிய செயல்முறையை மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் பணிப்பாளர் சபைக்கு இழப்புக்களை பதிவழிக்கலாம். எவ்வாறாயினும், கம்பனி இது சம்பந்தமாக கூறப்பட்டுள்ள செயல்முறையைப் பின்பற்றாது மாநகர சபைகள்

மற்றும் மாகாண சபைகளில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 387,806,335 தெரு விளக்குக்கான கடன்பட்டோர் தொகையை 2021 நவம்பர் 30 அன்று வழங்கப்பட்ட பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில் மீளாய்வாண்டில் கம்பனி பதிவழிப்புச் செய்திருந்தது.

(எ) ஒரு வருடத்தின் இறுதி மாதத்தில் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்ந்துவரும் ஆண்டின் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றப்பட்ட வருமானமாக அங்கீகரிக்க பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் இல் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் 2021 சனவரி இல் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் இதே நடைமுறை ஏனைய ஆண்டுகளிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே, மொத்தமற்ற வாடிக்கையாளர் களிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை சரியாக மதிப்பிட முடிந்திருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 குழுமத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் கம்பனியின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஆனால், ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை **பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில்** வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது

அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என நான் முடிவுக்கு வந்தால் அவற்றை சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். அவ்வாறான சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் எவையும் இருக்கவில்லை.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குழுமம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் மற்றும் குழுமத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் கம்பனியினதும் குழுமத்தினதும் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான

உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால்

நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் குழுமம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் (கம்பனிகளுக்கு மாத்திரம் பொருத்தமானது) பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கம்பனி பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அங்கத்தவர்கள் எவருக்கும் கம்பனி சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

விதிகள்/ வழிகாட்டல்களுக்கான தொடர்பு	**விபரம்**
2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை.	
(i) 9.2 ஆம் பந்தி	கம்பனிக்கான அமைப்பு வரைபடமும் அங்கீகரித்த பதவியணியினர் கோப்பும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 9.12 ஆம் பந்தி	தொழில்முயற்சி ஒன்றால் சேர்த்துக்கொள்ளப்பட்ட எந்தவொரு நலன்புரித் திட்டமும் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் இருப்பினும், சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,226,519 கூட்டுத்தொகையான மீதியைக் கொண்ட கம்பனியின் புலமைப்பரிசில் நிதியத்திற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
(iii) 9.14 ஆம் பந்தி	கம்பனியின் மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வழிகாட்டல்கள் கையேடு சபையால் அங்கீகரிக்க ப் பட்டதன் பின்னர் அதற்குப் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினது ஒத்திசைவை பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், அதற்கிணங்கிச் செயற்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது என.

2.3 ஏனைய அவதானிப்புகள்

(அ) கிளைகளில் மேற்கொள்ளப்படும் சேகரிப்புச் செயல்முறை மற்றும் நடைமுறைகள் தொடர்பில் தலைமை நிதி அதிகாரியால் வெளியிடப்பட்ட 2018 திசெம்பர் 20 ஆந் தேதியிட்ட சுற்றறிக்கையின்படி, "காசாளர் கருமபீடங்களில் காசு சேகரிப்புத் தொடர்பான அனைத்து வேலைகளும் அதாவது கணக்கிணக்கங்களைச் சரிபார்த்தல், சான்றளித்தல் மற்றும் புதுப்பித்தல்களுக்கு ஒப்புதல் அளித்தல், பட்டியலிடல், ப்ரோன்டோ மற்றும் காசுப் புத்தகங்களை தயாரித்தல் ஆகியன இரண்டு வேலை நாட்களுக்குள் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். அதன்படி, வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட தொகைகள் பட்டியலிடல் முறைமையில் காசாளர்களால் பதிவு செய்யப்பட்டு, பட்டியலிடல் முறைமையின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த இரண்டு முறைமைகளும் ஒன்றாக இணைக்கப்படாததால், ரொன்டோ முறைமையின் ஊடாக காசாளர் கருமபீடங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பொதுப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மாறாக, கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற சில நாட்களுக்குப் பின்னரே அனைத்து பெறுவனவுகளும் கைமுறையாக பொதுப் பெரேட்டில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) "சூரிய பால சங்க்ராமய" கடன் திட்டத்தைப் பொறுத்தவரை, தேசிய சேமிப்பு வங்கிக்கும் கம்பனிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட சூரியசக்தி கடன் ஒடன்படிக்கையில் வட்டி செலுத்தும் தேதிகள் மற்றும் வட்டியைக் கணக்கிடுவதற்கான அடிப்படை ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆட்டோமொபைல் இன்ஜினியரிங்கில் தகுதி பெற்ற போக்குவரத்து அதிகாரியின் மேற்பார்வையுடன் நிர்வாகப் பிரிவின் கீழ் ஒரு மையப்படுத்தப்பட்ட போக்குவரத்து பிரிவு நிறுவப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக போக்குவரத்து செயல்பாடுகள் பரவலாக்கப்பட்டிருந்தன. இதன்படி, கடமைகளுக்காக வாகனங்களை ஒதுக்கீடு செய்தல், பதிவேடுகளை வைத்திருத்தல், ஓட்டப் பதிவேடுகள் மற்றும் வாகனசரிதைப் புத்தகங்களைப் பராமரித்தல், எரிபொருள் வழங்குதல், பழுதுபார்த்தல் மற்றும்

பராமரித்தல் போன்ற வாகனங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியாகக் கையாளப்பட்டிருந்தன. எனவே, வாகன நிர்வாகத்தின் மீதான கட்டுப்பாடு கம்பனியால் முறையாக வடிவமைக்கப்பட்டு உரிய முறையில் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கம்பனியால் தயாரிக்கப்பட்டுள்ள முதன்மை கொள்வனவுத் திட்டத்தில் மூன்று வருட காலத்திற்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முதன்மை கொள்வனவுத் திட்டம் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்படி, குறிப்பிட்ட தேதியில் உள்ளவாறான கொள்வனவுகளின் செயல் முன்னேற்றத்தை தனித்தனியாகக் கண்டறிவது கடினமாக இருந்தது.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதிக் கூற்றுக்கள்

இலாபம் அல்லது நட்டக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

	குறிப்பு	குழுமம்		கம்பனி	
		2021	**2020** - மீளமைத்த	**2021**	**2020** - மீளமைத்த
		ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000
வருமானம்	4	33,644,837	31,678,905	32,200,503	30,709,215
விற்பனைக் கிரயம்		(25,745,147)	(25,503,865)	(24,403,497)	(24,596,359)
மொத்த இலாபம்		7,899,690	6,175,040	7,797,007	6,112,855
ஏனைய செயற்பாட்டு வருமானம்	5	2,315,557	923,626	2,319,820	922,496
செயற்பாட்டுச் செலவினம்		(2,927,724)	(2,616,911)	(2,924,219)	(2,616,856)
நிர்வாகச் செலவினம்		(2,863,061)	(2,900,379)	(2,832,383)	(2,875,719)
செயற்பாட்டு இலாபம்		4,424,462	1,581,375	4,360,224	1,542,776
நிதி வருமானம்	6.1	905,443	986,404	897,693	986,020
நிதிச் செலவினம்	6.2	(215,929)	(142,809)	(214,901)	(142,541)
வரிக்கு முந்திய இலாபம்	7	5,113,976	2,424,971	5,043,017	2,386,255
வருமான வரிச் செலவினம்	8	(1,824,938)	(600,837)	(1,810,102)	(594,694)
ஆண்டிற்கான இலாபம்		3,289,039	1,824,134	3,232,915	1,791,562

இலாபப் பகிர்வு:		
கம்பனியின் உரிமைத்துவ பங்குதாரர்	3,270,663	1,817,143
கட்டுப்பாடற்ற ஆர்வத்தினர்	18,376	6,991
ஆண்டிற்கான இலாபம்	3,289,039	1,824,134

பக்கம் 50 முதல் 94 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

	குறிப்பு	குழுமம்		கம்பனி	
		2021	**2020 - மீளமைத்த**	**2021**	**2020 - மீளமைத்த**
		ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000
ஆண்டிற்கான இலாபம்		3,289,039	1,824,134	3,232,915	1,791,562
ஏனைய விரிவான வருமானம்					
தொடர்ந்துவரும் காலத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மீளவகைப்படுத்தப்பட வேண்டிய ஏனைய விரிவான வருமானம்					
எ.ஃப்வீஓசீஐ கருவிகள் மீதான நயம்	21.4	926,877	32,665	926,877	32,665
எ.ஃப்வீஓசீஐ கருவிகளின் தேறிய சந்தைப் பெறுமதி மாற்றங்கள் மீதான பிற்போட்ட வரி		(92,688)	(3,266)	(92,688)	(3,266)
தொடர்ந்துவரும் காலத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மீளவகைப்படுத்த தேவையற்ற ஏனைய விரிவான வருமானம்					
சேவைக்குப் பின்னரான நலப் பொறுப்புக்கள் மீதான உள்ளபடியான நயம் ∴(நட்டம்)	24.1	71,102	(190,734)	70,060	(189,444)
உள்ளபடியான நட்டம் மீதான பிற்போட்ட வரி மீளறவீடு		(19,804)	53,276	(19,617)	53,044
ஆதனம், பொறி, உபகரண மீள்மதிப்பீடு	21.2	-	455,516		455,516
மீள்மதிப்பீட்டு மிகை மீதான பிற்போட்ட வரி மாற்றம்		-	(127,544)	-	(127,544)
ஏனைய விரிவான வருமனம், ஆண்டிற்கான வரியின் தேறியது		885,487	219,913	884,632	220,970
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		4,174,526	2,044,046	4,117,547	2,012,532
மொத்த விரிவான வருமானப் பகிர்வு :					
- கம்பனியின் உரிமைத்துவ பங்காளர்		4,155,894	2,037,373		
- கட்டுப்பாடற்ற ஆர்வத்தினர்		18,632	6,674		
		4,174,526	2,044,046		
பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூபா)	9.	28.56	15.87	28.23	15.65

பக்கம் 50 முதல் 94 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

நிதி நிலைமைக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

	குறிப்பு	குழுமம்		கம்பனி	
		2021	2020 - மீளமைத்த	2021	2020 - மீளமைத்த
		ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000
சொத்துக்கள்					
நடைமுறையல்லா சொத்துக்கள்					
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முதலீட்டு ஆதனம்	10	14,463,170	13,996,466	14,180,198	13,675,416
கற்புலனாகாத சொத்துக்கள்	11	-	-	117,038	128,763
துணைக் கம்பனி முதலீடுகள்	12	47,111	42,018	41,701	36,043
ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடான	13		-	31,319	31,319
நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்	14	11,765,752	10,838,875	11,765,752	10,838,875
பங்குகளிற்கான முற்பணம்	15		-	64,931	64,931
பயன்படுத்தும் உரிமைச் சொத்துக்கள்	16	112,002	164,892	112,002	164,892
ஏனைய நிதிச் சொத்துக்கள்	19	5,481,067	1,744,353	5,481,067	1,744,353
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**31,869,103**	**26,786,604**	**31,794,009**	**26,684,592**
நடைமுறைச் சொத்துக்கள்					
இருப்புக்கள்	17	2,952,444	2,989,840	2,647,238	2,756,041
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை	18	7,973,332	8,582,132	7,722,411	8,283,196
முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள்		96,255	131,789	259,865	131,789
ஏனைய நிதிச் சொத்துக்கள்	19	9,241,394	9,086,923	8,926,394	9,046,923
காசு மற்றும் வங்கி மீதிகள்	20	1,303,098	526,364	1,118,167	519,402
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		21,566,522	21,317,049	20,674,074	20,737,352
மொத்தச் சொத்துக்கள்		**53,435,625**	**48,103,653**	**52,468,083**	**47,421,944**
உரிமைத்துவம் மற்றும் பொறுப்புக்கள்					
தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களிற்கு பகிரப்படவேண்டிய உரிமையாண்மை					
கூறப்பட்ட மூலதனம்		1,145,067	1,145,067	1,145,067	1,145,067
ஒதுக்கங்கள்					
காணி கட்டிட மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		2,182,788	2,182,788	2,112,937	2,112,937
வருமான ஒதுக்கம்		340,642	340,642	340,642	340,642
நியாயப் பெறுமதி ஒதுக்கம்		9,616,104	8,781,915	9,616,104	8,781,915
நிறுத்திவைத்த உழைப்புக்கள்		25,464,897	22,643,193	25,194,388	22,411,030
கம்பனியின் உரிமை பங்குதாரர்களிற்கு பகிரப்பட வேண்டிய மொத்த கட்டுப்பாடற்ற ஆர்வங்கள்		38,749,498	35,093,605	38,409,138	34,791,591
கட்டுப்பாடற்ற ஆர்வம்		155,841	137,209	-	-
மொத்த உரிமைத்துவம்		**38,905,339**	**35,230,814**	**38,409,138**	**34,791,591**
நடைமுறையல்லா பொறுப்புக்கள்					
வட்டி கொண்ட பெறுகைகள்	22	42,787	94,393	42,787	94,393
பிற்போட்ட வரிப் பொறுப்புகள்	8.3	1,396,838	1,127,635	1,393,037	1,125,080
பிற்போட்ட வருமானம்	23	5,086,756	4,870,723	5,086,756	4,870,723
தொழிலுக்கு பிந்திய நலப் பொறுப்புக்கள்	24	1,491,941	1,482,956	1,487,284	1,478,148
		8,018,323	7,575,707	8,009,863	7,568,344
நடைமுறைப் பொறுப்புகள்					
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	25	4,660,649	4,838,007	4,208,035	4,624,583
செலுத்த வேண்டிய வருமான வரி		1,382,965	380,206	1,372,698	373,510
வட்டிக் கடன் பெறுகைகளின் நடைமுறை தொகை	22	468,349	78,918	468,349	63,918
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		6,511,963	5,297,130	6,049,082	5,062,011
மொத்தப் பொறுப்புகள்		14,530,286	12,872,838	14,058,945	12,630,355
மொத்த உரிமைத்துவமும் பொறுப்புகளும்		**53,435,625**	**48,103,653**	**52,468,083**	**47,421,944**

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்..

.....
மேலதிகப் பொது முகாமையாளர் - நிதி (பதிற்கடமை)

.....
பொது முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். சபையின் சார்பாக அங்கீகரித்துக் கையொப்பமிடப்படுகின்றது :

.....
தலைவர்.பணிப்பாளர்

.....
பணிப்பாளர்

பக்கம் 50 முதல் 94 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

2022 யூலை 20, கொழும்பு

உரிமைத்துவத்தில் மாற்றங்கள் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

குழுமம்	தாய்க் கம்பனியின் உரிமையாளருக்கு பகிரத்தக்கவை						கட்டுப்பாடற்ற ஆர்வங்கள்	மொத்த உரிமைத்துவம்
	கூறப்பட்ட மூலதனம்	வருமான ஒதுக்கங்கள்	மீள்மதிப்பீட்டு மிகை	நியாயப பெறுமதி ஒதுக்கம்	நிறுத்தி வைத்த உழைப்பு	மொத்தம்		
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	1,854,817	8,752,517	21,725,353	33,818,395	150,631	33,969,027
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	1,817,143	1,817,143	6,991	1,824,134
ஏனைய விரிவான வருமானம்	-	-	327,971	29,398	(137,140)	220,230	(317)	219,913
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	-	-	327,971	29,398	1,680,003	2,037,373	6,674	2,044,046
உரிமைத்துவ பங்காளர்களிறகான பங்கிலாபம்					(750,000)	(750,000)	-	(750,000)
முன்னைய ஆண்டு / சிறுபான்மை ஆவர்வச் சீராகக்கம்					(12,163)	(12,163)	(20,096)	(32,259)
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	2,182,788	8,781,915	22,643,193	35,093,605	137,209	35,230,814
ஆண்டிற்கான இலாபம்					3,270,663	3,270,663	18,376	3,289,039
ஏனைய விரிவான வருமானம்				834,189	51,041	885,231	256	885,487
காலப்பகுதிக்கான மொத்த வரிவான வருமானம்	-	-	-	834,189	3,321,704	4,155,894	18,632	4,174,526
உரிமைத்துவ பங்காளர்களிறகான பங்கிலாபம் (2022 ஏப்ரல் 04 இல் செலுத்தியது)					(500,000)	(500,000)	-	(500,000)
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	2,182,788	9,616,104	25,464,897	38,749,499	155,841	38,905,340

பக்கம் 50 முதல் 94 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

உரிமைத்துவத்தில் மாற்றங்கள் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

கம்பனி	கூறப்பட்ட மூலதனம் ரூபா '000	வருமான ஒதுக்கம் ரூபா '000	மீளமதிப்பீட்டு மகை ளுரசிடரள ரூபா '000	நியாயப் பெறுமதி ஒதுக்கம் ரூபா '000	நிறுத்திவைத்த உழைப்பு நுயசஎைபெள ரூபா '000	மொத்த உரிமைத்துவம் ரூபா '000
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	1,784,965	8,752,517	21,505,868	33,529,059
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	1,791,562	1,791,562
ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம்			327,971	29,398	(136,400)	220,970
ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்	-	-	327,971	29,398	1,655,162	2,012,532
உரிமைத்துவ பங்காளர்களிறகான பங்கிலாபம்					(750,000)	(750,000)
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	2,112,937	8,781,915	22,411,030	34,791,591
ஆண்டிற்கான இலாபம்					3,232,915	3,232,915
ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம்				834,189	50,443	884,632
ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்	-	-	-	834,189	3,283,358	4,117,547
உரிமைத்துவ பங்காளர்களிறகான பங்கிலாபம் (2022 ஏப்ரல் 04 இல் செலுத்தியது)					(500,000)	(500,000)
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	2,112,937	9,616,104	25,194,388	38,409,137

பக்கம் 50 முதல் 94 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

காசுப் பாய்ச்சல் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

	குறிப்பு	குழுமம் 2021	குழுமம் 2020 - மீளமைத்த	கம்பனி 2021	கம்பனி 2020 - மீளமைத்த
		ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000	ரூபா.'000
செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்					
விரிக்கு முன் இலபம்		5,113,976	2,424,971	5,043,017	2,386,255
சீராக்கல்கள்					
ஆதனம், பொறி மற்றும் உபகரண தேய்மானம்		915,947	922,816	883,118	885,400
கற்புலனாகா சொத்துக் காலக்கழிவு		(428,897)	(407,710)	(428,897)	(407,710)
ஆதனம், பொறி மற்றும் உபகரண மீள்மதிப்பீட்டு மிகை		6,283	2,502	3,859	618
பிற்போட்ட வருமானக் காலக்கழிவு					-
முதலீட்டு ஆதன பெறுமானத்தேய்வு		-	-	4,604	2,895
சொத்து பயன்படுத்தல் உரிமை – பெறுமாதனத்தேய்வு		57,384	48,720	57,384	48,720
ஒய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு		203,005	189,554	201,938	188,775
வியாபார வருமதி மீதான காலத்தேய்வு		(163,747)	578,723	(163,773)	578,270
மெதுவாக நகர்வுறும் இருப்புக்களிற்கான ஏற்பாடு		6,611	(56,638)	6,611	(56,638)
பொறி, ஆதனம் மற்றும் உபகரண கைதவிர்ப்பு இலாபம் / (நட்டம்)		15,471	(13,972)	15,471	(13,972)
வட்டி வருமானம்		(905,443)	(986,404)	(897,693)	(986,020)
வட்டிக் கிரயம்		215,929	142,809	214,901	142,541
பங்கிலாப வருமானம்		(1,727,273)	(316,172)	(1,727,273)	(316,172)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலபம்		**3,309,247**	**2,529,198**	**3,213,267**	**2,452,962**
இருப்புக்கள் (அதிகரித்தல்).'.குறைதல்		30,786	(848,819)	102,193	(897,268)
முற்பணங்கள் மற்றும் முற்செலுத்துகைக் (அதிகரித்தல்).'.குறைதல்		35,534	117,309	(128,076)	117,295
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் (அதிகரித்தல்).'.குறைதல்		772,547	(5,829,458)	724,558	(5,863,707)
வியாபார மற்றும் ஏனைய சென்மதி அதிகரித்தல்.'.(குறைதல்)		(677,358)	(2,046,695)	(916,548)	(1,902,755)
பிற்போட்ட வருமானம் அதிகரித்தல்.'.(குறைதல்)		644,930	518,737	644,930	518,737
செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக்க ப்பட்ட காசு		**4,115,686**	**(5,559,729)**	**3,640,324**	**(5,574,736)**
செலுத்திய வருமான வரி		(665,468)	(564,682)	(655,262)	(565,971)
செலுத்திய வட்டி		(215,929)	(142,809)	(214,901)	(142,541)
இளைப்பாற்று பணிக்கொடைக் கொடுப்பனவு		(122,918)	(41,511)	(122,743)	(41,511)
செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக் கப்பட்ட தேறிய காசு		**3,111,371**	**(6,308,731)**	**2,647,419**	**(6,324,758)**
முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்					
ஏனைய நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடுகள்		(3,891,185)	6,825,639	(3,616,185)	6,825,639
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய கையேற்பு		(1,409,499)	(867,500)	(1,405,768)	(823,956)
சொத்து பயன்படுத்தல் உரிமையின் தேறிய கையேற்பு		(4,494)	(68,224)	(4,494)	(68,224)
முதலீட்டு ஆதனங்களின் கையேற்பு		905,443	986,404	897,693	986,020
பெறப்பட்ட பங்கிலாப வருமானம்		1,727,273	316,172	1,727,273	316,172
முதலீட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக்கப்பட்டஃ (பயன்படுத்திய) தேறிய காசு		**(2,672,463)**	**7,192,492**	**(2,401,481)**	**7,235,650**
நிதி நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்					
தாய்க் கம்பயின் உரிமையாளர்களிற்குச் செலுத்திய பங்கிலாபம்			(750,00 0)		(750,000)
சொத்து பயன்படுத்தல் உரிமையின் தேறிய கையேற்பின் மீதான குத்தகைப் பொறுப்பு		(69,732)	20,146	(54,732)	5,146
குறுங்காலக் கடன்		(15,000)	15,000		
கடற்பாடற்ற வட்டிப் பங்குதாரர்களிற்குச் செலுத்திய பங்கிலாபம்			-		-
நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்		**(84,732)**	**(714,854)**	**(54,732)**	**(744,854)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றினது தேறிய அதிகரிப்புஃ(குறைவு)		354,177	168,907	191,207	166,038
வருட ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவையும்		529,878	360,972	507,916	341,878
வருட முடிவிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவையும்	20	884,055	529,878	699,124	507,916
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பகுப்பாய்வு	20				
நிதி நிலைமைக் கூற்றிலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்		1,303,098	526,364	1,118,167	519,402
வங்கி மேலதிகப் பற்று		(419,043)	3,514	(419,043)	(11,486)
காசுப் பாய்ச்சல் நோக்கத்திற்கான காசும் காசுக்கு சமமானவையும்		884,055	529,878	699,124	507,916

பக்கம் 50 முதல் 94 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

1. பொதுவான தகவல்கள்

1.1 அறிக்கையிடல் நிறுவகம்

வரையறுக்கப்பட்ட லெகோ மின்சார (தனியார்) கம்பனி ("கம்பனி") இலங்கையிலுள்ள பொறுப்பு வரையறுத்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அதன் பிரதான வணிகத் தளமான இலக்கம் 411, இ.எச். குரே கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

சொத்துக்களுக்குப் பங்களிக்கின்ற பொருளியல் நலன்கள் நிறுவனத்திற்குப் உட்பாய்கின்ற மற்றும் சொத்துக்களின் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படக் கூடிய சொத்துக்கள் அருவச் சொத்தாக வகைப்படுத்தப்படுவதுடன் கிரயத்திலிருந்து திரண்ட காலத்தேய்மானமும் திரண்ட நட்டக்கடனும் கழிக்கப்பட்டு முன்கொண்டு செய்யல்லப்படுகின்ற சொத்து அருவச் சொத்ததாக அங்கீகரிக்கப்படுகிறது. தனித்தனியாக கையகப்படுத்தப்பட்ட அருவ சொத்துக்கள், ஆரம்ப அங்கீகாரத்தின் அடிப்படையில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. அத்தகைய தனித்தனியாக கையகப்படுத்தப்பட்ட அருவமான சொத்துகளின் கிரயமானது அதன் கொள்விலை, இறக்குமதி வரிகள், திரும்பப் பெற முடியாத கொள்முதல் வரிகள் மற்றும் அதன் குத்துரைத்த பயன்பாட்டிற்காக சொத்தை தயாரிப்பதற்கான நேரடியாகக் ஏற்படுகின்ற கிரயம் ஆகியவற்றை உள்ளடக்கும். ஒரு வணிகச் சேர்க்கையின் போது பெறப்பட்ட அருவச் சொத்துகளின் கிரயமானது, கையகப்படுத்தப்பட்ட தேதியில் உள்ள சொத்தின் நியாயமான மதிப்பாகும். உள்ளக செயற்திட்டத்தின் அபிவிருத்திக் கட்டத்திலிருந்து எழும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அருவச் சொத்தின் கிரயமானது, நிர்வாகத்தின் நோக்கத்தில் செயல்படும் வகையில் சொத்தை உருவாக்க, உற்பத்தி மற்றும் தயாரிப்பதற்குத் தேவையான அனைத்து நேரடியாகக் கூறக்கூடிய செலவுகளையும் உள்ளடக்கியதாகும். புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் புரிதலைப் பெறுவதற்கான வாய்ப்புடன் மேற்கொள்ளப்படும் ஏனைய மேம்பாட்டுச் செலவுகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் ஏற்படும் போது வருமான கூற்றில் செலவாக பதிவுழிக்கப்படுகின்றன.

3.2.3.2.2 தொடர்ந்துவரும் செலவினம்

குறித்துரைத்த சொத்தொன்றுடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகரிக்கின்ற போது தொடர்ந்துவரும் செலவினம் மூலதனமாக்கப்படுகின்றது. ஏற்படுகின்ற ஏனைய சகல செலவினமும் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2.3.2.3 தொடர்ந்துவரும் அளவீடு

ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர், ஒரு அருவச் சொத்து அதன்மீதான ஏதேனும் திரட்டிய காலத்தேய்மானம் மற்றும் திரட்டிய நட்டங்கள் கழிக்கப்பட்டு கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. ஒரு அருவ சொத்தின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கைக் காலமானது வரையறுக்கப்பட்ட அல்லது காலவரையற்றதாக மதிப்பிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட ஆயுளைக் கொண்ட அருவ சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்காலம் ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயனுள்ள வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதாரப் நலன்களின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறை ஆகியவை, தகுந்தபடி, காலத்தேய்மானக் காலத்தை அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலம் கொண்ட அருவ சொத்துக்களின் மீதான காலத்தேய்மானம் வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காலவரையற்ற பயனுள்ள ஆயுளைக் கொண்ட அருவமான சொத்துக்கள் காலத்தேய்மானம் செய்யப்படுவதில்லை, ஆனால் அவை தனித்தனியாகவோ அல்லது காசுப் பாய்ச்சலை உருவாக்கும் மட்டத்திலோ ஆண்டுதோறும் கழிவுநட்டத்திற்காக பரிசோதிக்கப்படுகின்றன. காலவரையற்ற வாழ்க்கையின் மதிப்பீடு ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு, காலவரையற்ற வாழ்க்கை காலம் தொடர்ந்தும் காணப்படுகிறதா என்பது தீர்மானிக்கிறது. இல்லையெனில், காலவரையறை என்பதிலிருந்து வரையறுக்கப்பட்ட பயனுள்ள வாழ்க்கைக் காலத்திற்கான ஒரு மாற்றமாக எதிர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

3.2.3.2.4 கணனி மென்பாகம்

கையேற்கப்பட்ட கணனி மென்பாக அனுமதிப்பத்திரங்கள் அவற்றை கையேற்பதற்கு ஏற்பட்ட கிரயத்தின் அடிப்படையில் மூலத னமாக்கப்படுவதுடன் குறித்த மென்பாகம் பாவனைக்கு எடுக்கப்படுகின்றது. இக்கிரயம் அவற்றின் பயன்தரு ஆயுட்காலமான 05 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது. கணனி மென்பாக நிகழ்ச்சித்திட்டங்களை பராமரிப்பதுடன் சம்பந்தப்பட்ட கிரயங்கள் குறித்த செலவினம் ஏற்படுகையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

3.2.3.2.5 தொழில்நுட்ப அறிவுத்திறன்கள்

தொழில்நுட்ப அறிவுத்திறன்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. இந்தக் கிரயங்கள் 15 வருட ஒப்பந்த காலம் முழுவதற்கும் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

3.2.3.2.6 நன்மதிப்பு

கையகப்படுத்தும் முறையைப் பயன்படுத்துவதற்காக வணிக சேர்க்கைகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. ஒரு கையகப்படுத்துதலின் கிரயமானது, மாற்றப்பட்ட பரிசீலனையின் மொத்தமாக அளவிடப்படுவதுடன் இது கையகப்படுத்தப்பட்ட தேதியில் நியாயமான மதிப்பு மற்றும் கையகப்படுத்துபவர் மீதான கட்டுப்படுத்தாத வட்டியின் அளவு ஆகியவற்றில் அளவிடப்படுகிறது.

3.2.3.2.6.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

நுன்மதிப்பானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பெறப்பட்ட நிகர அடையாளம் காணக்கூடிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீதான முந்தைய வட்டி கருத்திற்கொள்ளப்படுகின்றது. கையகப்படுத்தப்பட்ட நிகர சொத்துகளின் நியாயமான பெறுமதி மாற்றப்பட்ட மொத்தப் பெறுமதியை விட அதிகமாக இருந்தால், குழுமமானது கையகப்படுத்தும் தேதியில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து சொத்துகளையும் சரியாக அடையாளம் கண்டுள்ளதா என்பதை மீளாய்வு செய்து அனைத்து பொறுப்புகளையும் மீளாய்வு செய்கிறது. மறுமதிப்பீட்டின் விளைவாக, மாற்றப்பட்ட மொத்த பெறுமதியின் மீது பெறப்பட்ட நிகர சொத்துகளின் நியாயமான பெறுமதியை விட அதிகமாக இருந்தால், இலாபம் அல்லது நட்டத்தில் அது அங்கீகரிக்கப்படும்.

3.2.3.2.6.2 தொடர்ந்துவரும் அளவீடு

ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு, திரட்டப்பட்ட கழிவு நட்டங்கள் ஏதும் காணப்பட்டால் அது கழிக்கப்பட்டு நன்மதிப்பு கிரயத்தில் அளவிடப்படுகிறது. ஆண்டுதோறும் கழிவுநட்டத்திற்காக நன்மதிப்பு பரிசோதிக்கப்படுகிறது. கழிவுநட்ட பரிசோதனையின் நோக்கத்திற்காக, ஒரு வணிக சேர்க்கையின் போது பெறப்பட்ட நன்மதிப்பானது, கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து, குழுவின் ஒவ்வொரு காசு-உருவாக்கும் அலகுகளுக்கும் ஒதுக்கப்பட்டு அவை

கையகப்படுத்தியவரின் பிற சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் என்பதைப் பொருட்படுத்தாது அந்தந்த அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

3.2.3.3 முதலீட்டு ஆதனங்கள்

இறையில் காணிகள் மற்றும் கட்டிடங்கள் முதலீட்டு ஆதனங்களில் உள்ளடக்கப்படுகின்றன. முதலீட்டு ஆதனமொன்று ஆரம்பத்தில் கிரயத்தில் இனங்காணப்படுகின்றது. கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டு ஆதனமொன்றின் கிரயம் அதனது கொள்விலை மற்றும் நேரடியாக பகிரக்கூடிய எவையேனும் செலவினத்தை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டு ஆதனமொன்றின் கிரயம் அதனை நிர்மாணிப்பதற்கு அல்லது அபிவிருத்தியினை பூரணப்படுத்தும் திகதி வரையிலுமான கிரயமாகும்.

குழுமம் முதலீட்டு ஆதனங்களிற்காக கிரய மாதிரியினை பிரயோகிக்கின்றது. அதற்கமைய, முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்ட காணிகள், எவையேனும் திரண்ட காலக்கழிவு நட்டங்கள் கழிக்கப்பட்ட பின்னர் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன் முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்கள், எவையேனும் திரண்ட பெறுமானத்தேய்வுகள் மற்றும் திரண்ட காலக்கழிவு நட்டங்கள் கழிக்கப்பட்ட பின்னர் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

பெறுமானத்தேய்வு

முதலீட்டு ஆதனமாக கருதப்பட்ட காணிகள் மீது எவ்வித பெறுமானத்தேய்வும் செய்யப்படுவதில்லை.

குழுவின் ஏனைய முதலீட்டு ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வு அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் நேர்கோட்டு முறையினைப் பிரயோகித்து நிலையானதோர் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

காணிகள் - 40 ஆண்டுகள்

குழுமத்திலுள்ள கம்பனிகளால் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி அல்லது வழங்களிற்காக அல்லது நிர்வாக நோக்கத்திற்காக உரித்தாகக் கொண்டுள்ள ஆதனங்கள், ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக கருதப்படுகின்ற அதேவேளை இந்த ஆதனங்கள் சொத்தினை உரித்தாகக் கொண்டுள்ள கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனமாகக் கருதப்படுகின்றது.

3.2.3.4 இருப்புக்கள்

மெதுவாக நகர்கின்ற மற்றும் பழுதடைந்த இருப்பிற்கான ஏற்பாட்டினை மேற்கொண்ட பின்னருள்ள இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமானம் ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமானத்தில் கணிக்கப்படுகின்றன. தேறிய தேறக்கூடிய பெறுமானம் என்பது சாதாரண வணிக நடவடிக்கையில் மதிப்பிடப்பட்ட பொருளின் விற்பனை விலையிலிருந்து அதனை விற்பதற்கு ஏற்படவுள்ள செலவுகளைக் கழிக்கவரும் தொகையாகும்.

ஒவ்வொரு பொருளையும் அது இருக்கின்ற இடத்திற்குக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட கிரயங்கள் மற்றும் அவற்றின் நிலைமை பின்வரும் சூத்திரங்களைக் கொண்டு கணக்கீடு செய்யப்படுகின்றன:

தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள்	நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில்
வழிச்சரக் குகளும் ஏனையவையும்	உண்மைக் கிரயத்தில்
மூலப்பொருட்கள்	நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில்
முடிவுப் பொருட்கள் மற்றும் குறைவேலை கள்	சாதாரண நிலமைகளில் பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில்.
வழிச்சரக்குள்	உண்மைக் கிரயத்தில்

3.2.3.5 அரசாங்க மானியங்கள்

மானியம் பெறப்படும் என்று நியாயமான உத்தரவாதம் உள்ள இடங்களில் அரசாங்க மானியங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. மேலும், இணைக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் பின்பற்றப்படும் மானியம் ஒரு செலவு உருப்படியுடன் தொடர்புடையதாக இருக்கும் போது அது ஈடுசெய்யும் நோக்கம் கொண்ட தொடர்புடைய செலவுகள் செலவிடப்படும் காலங்களில் முறையான அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. மானியம் ஒரு சொத்துடன் தொடர்புடையதாக இருக்கும் போது அது தொடர்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள வாழ்நாளில் சமமான வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

குழுமம் நிதி நிலமைக் கூற்றில் இதனை நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் என முன்வைக்கிறது. இது சொத்தின் பயனுள்ள வாழ்க்கை மீது முறையான மற்றும் பகுத்தறிவு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

3.2.4 நிதிசார்ந்த கருவிகள்

ஓர் நிதிக் கருவி என்பது ஒரு நிறுவனத்தினது நிதிச் சொத்ததிற்கும் மற்றொரு நிறுவனத்தின் நிதிப் பொறுப்பிற்கு அல்லது உரிமைத்துவ கருவிக்கும் வழிவகுக்கும் எந்தவொரு ஒப்பந்தமுமாகும்.

3.2.4.1 நிதிசார்ந்த சொத்துக்கள்

3.2.4.1.1 ஆரம்ப அங்கீகப்பும் அளவீடும்

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பில் வகைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர், ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ஒசீஐ) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக காலத்தேய்மானக் கிரயத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகார வகைப்படுத்தலானது நிதிச் சொத்தின் ஒப்பந்த பணப்புழக்க பண்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக மாதிரியை பொருத்து அமைந்திருக்கும். ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிருக்காத வியாபார அறவிடுதல்களைத் தவிர்த்து அல்லது குழுமம் நடைமுறைக்கேற்றவாறு பயன்படுத்தியவற்றைத் தவிர்த்து, ஒரு நிதிச் சொத்தின் கொடுக்கல் வாங்கல் கிரயங்கள், குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிருக்காத வியாபார அறவிடுதல்கள் என்பவற்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக

ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான பெறுமதியில் குழுமம் மதிப்பிடுகின்றது.

ஒரு நிதிச் சொத்து வகைப்படுத்தப்பட்டு, அதனை ஓசீஐ ஊடாக காலத்தேய்மானக் கிரயத்தில் அல்லது நியாயமான பெறுமதியில் அளவிடுவதற்கு, அதன் எஞ்சிய தொகையின் அடிப்படையில் அசல் மற்றும் வட்டி மாத்திரமே செலுத்தப்படுவதற்கான காசுப் பாய்ச்சலிற்கு (எஸ்பிபிஐ) வழிவகுத்தல் வேண்டும். இந்த மதிப்பீடு எஸ்பிபிஐ பரிசோதனை என அழைக்கப்படுவதுடன் ஒரு கருவி மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றது.

நிதிச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக முறை காசுப் பாய்ச்சல்களை உருவாக்குதல் என்பது குழுமம் அதன் நிதிச் சொத்துக்களை எவ்வாறு நிர்வகிக்கின்றது என்பதனைக் குறிக்கின்றது. ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல், நிதிச் சொத்துக்களைவ ிற்பனை செய்தல் அல்லது இவை இரண்டும் காசுப் பாய்ச்சலை ஏற்படுத்துமா என்பதனை வணிக முறை தீர்மானிக்கின்றது. சந்தையிலுள்ள ஒழுங்குமுறை அல்லது உடன்பாட்டால் (வழமையான வியாபார வழிமுறைகள்) நிறுவப்பட்ட ஒரு கால எல்லைக்குள் சொத்துக்களை விநியோகிக்க வேண்டியுள்ள நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையானது அதனை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு உறுதியளித்த திகதியில் அதாவது வியாபாரம் இடம்பெறும் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

3.2.4.1.2 தொடர்ந்துவரும் அளவீடு

நிதிசார்ந்த சொத்துக்களின் தொடந்துவரும் அளவீடு பின்வருமாறு நான்கு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றது.

- காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- அங்கீகரிக்காதிருக்கும் திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிச்சயிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ கருவிகள்)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்

காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)

இந்த வகை குழுமத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின், குழுமம் நிதிச் சொத்துக்களை காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடுகின்றது.

- காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் ஒரு நிதிச் சொத்ததாக காணப்படுதல், மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதி முறைகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டிவீத (ஈஐஆர்) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் அவை நட்டக்கழிவிற்கு உட்படுகின்றன. சொத்தானது அங்கீகரிக்காது, மாற்றியமைக்கப்படாது அல்லது நட்டக்கழிவு அடையும் போது இலாபம் அல்லது நட்டத்தில் நயங்களும் நட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள், காசு, குறுங்கால வைப்புக்கள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்யவைகளை உள்ளடக்குகின்றது.

ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ கருவிகள்)

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், குழுமம் அதன் உரிமைத்துவ முதலீடுகளை ஐஏஎஸ் 32 – நிதிக் கருவிகளின் முன்னிலைப்படுத்தல் மற்றும் விற்பனைக்காக வைத்திருக்காதவை என்பதன் கீழ் வரைவிலக்கணப்படுத்தியுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்கையில் ஓசீஐ இன் ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிகளாக வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்யலாம். வகைப்படுத்தலானது கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிச்சயிக்கப்படுகின்றது.

இந்த நிதிச் சொத்துக்களின் நயங்களும் நட்டங்களும் ஒருபோதும் இலாபம் நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. நிதிச் சொத்தின் ஒரு பகுதியை மீட்டெடுத்தல் போன்ற வருமானங்களிலிருந்து குழுமம் நலன் பெறுவது தவிர்ந்த, பணம் செலுத்துவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பங்கிலாபம் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. அத்தகைய ஆதாயங்கள் ஓசீஐ இல் பதிவுசெய்யப்படுகின்றது. ஓசீஐ ஊடாக நியாயமான பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட பங்கிலாபம், கருவிகளின் காலக்கழிவு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

குழுமம் இந்த வகையின் கீழுள்ள அதன் பட்டியலிடப்படாத பங்கு முதலீடுகளை கைமாற்ற முடியாதவையாக தெரிவு செய்கின்றது.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதி சொத்துக்கள்

மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி காலத்தேய்மானக் கிரயத்தில் அல்லது FVOCI இல் வகைப்படுத்தப்படாத அனைத்து நிதிச் சொத்துக்களும் FVTPL இல் அளவிடப்படுகின்றன. இதில் அனைத்து வழித்தோன்றல் நிதி சொத்துகளும் அடங்கும். ஆரம்ப அங்கீகாரத்தின் பேரில், குழுமமானது நிதிச் சொத்தை மாற்றமுடியாமல் குறிப்பிடலாம், இல்லையெனில், காலத்தேய்மானக் கிரயத்தில் அல்லது FVOCI இல் குறிப்பிட்டால் அந்நிலையில் FVTPL இல் அளவிடப்பட வேண்டிய தேவைகளைப் பூர்த்திசெய்திருந்தால், அவ்வாறு செய்வது கணக்கீட்டு பொருத்தமின்மையை நீக்குகிறது அல்லது கணிசமாகக் குறைக்கிறது.

இந்த சொத்துக்கள் பின்னர் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. வட்டி அல்லது பங்கிலாப வருமானம் உட்பட நிகர ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2.4.1.3 மீள வகைப்படுத்தல்

நிதிச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான வணிக மாதிரியின் நோக்கத்தை குழுமம் மாற்றுதல் போன்ற அரிதான சூழ்நிலைகளில் மாத்திரமேயன்றி ஏனைய சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்கள்

அவற்றின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு மீள வகைப்படுத்தப்படுவதில்லை. SLFRS 9 ஆல் அத்தகைய மீள வகைப்படுத்தல்கள் அனுமதிக்கப்படாததால் நிதிப் பொறுப்புகள் மீள வகைப்படுத்தப்படுவதில்லை.

3.2.4.1.4 அங்கீகரிக்காதிருத்தல்

நிதிசார்ந்த ஒரு சொத்து (அல்லது, நிதிசார்ந்த ஒரு சொத்தின் ஒருபாகம் அல்லது அது போன்ற நிதிசார்ந்த சொத்துக்களின் ஒரு தொகுதி பொருத்தமானவிடத்து)

- காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இரு க்கின்ற போதும்
- குழு, அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது `ஒரு பாரப்படுத்தலுடான' ஏற்பாட்டின் கீழ், ஒரு மூன்றாந்தரப்புக்கு பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற் கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், இல்லையெனில் பின்வரும் இரண்டிலொரு விதத்தில்,

(அ) குழு, சொத்தின் சகல விதமான பொறுப்புக்களையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுத்துள்ளது, அல்லது.

(ஆ) குழு, அவ்வாறு சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுக்கவோ அல்லது பித்துவைக்க வோ இல்லையென்றாலும், சொத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை மாற்றிக் கையளித்துள்ளது எனும் போதும்,இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது.

குழு, ஒரு சொத்திலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக் கொடுத்துள்ளது அல்லது பாரப்படுத்தலூ டான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது எனும் போது, அது உரிமைத்துவத்தில் எந்தளவு ஆபத்தினையும் வெகுமதியினையும் வைத்துள்ளது என்பதனை குழுமம் மதிப்பிடுகின்றது.

அது கைமாற்றப்பட்டோ அல்லது வைத்திருக்கப்பட்டோ இல்லாத வேளையில், அதனைத்தொடர்ந்து சொத்தின் அனைத்து ஆபத்துக்களும் வெகுமதிகளும் சொத்தின் கைமாற்றப்பட்ட கட்டுப்பாடாவதில்லை. குழுமம் அதனை எந்தளவு தூரம் கைமாற்றமுடிகின்றதோ அதன்படி அங்கீகரிக்கின்றது. அந்த வேளையில், குழுமம் அதனுடன் தொடர்புடைய பொறுப்புக்களையும் அங்கீகரிக்கின்றது. கைமாற்றப்பட்ட சொத்தும் அதனுடன் சார்ந்த பொறுப்புக்களும் குழும் கொண்டுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அளவிடப்படுகின்றன. கைமாற்றப்பட்ட சொத்தின் மீது உத்தரவாதம் என்ற ரீதியில் தொடர்கின்றவை சொத்தின் முன்கொணரப்படும் தொகை மற்றும் குழுமம் அதற்காக மீளளிக்கப்பட வேண்டிய தொகை ஆகிய இரண்டிலும் குறைந்ததில் அளவிடப்படுகின்றது.

3.2.4.1.5 நிதிச் சொத்துக்களின் நட்டக்கழிவு

குழுமம் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான (ECLs) நட்டப் படிகளை பின்வருமாறு அங்கீகரிக்கின்றது.

- நிதிச் சொத்துக்கள் காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடப்பட்டுள்ளன.
- கடன் முதலீடுகள் FVOCI இல் அளவிடப்பட்டுள்ளன மற்றும்
- ஒப்பந்தச் சொத்துக்கள்.

12 மாதகால ECLs இல் அளவிடப்படுகின்ற பின்வருவனவற்றைத் தவிர்த்து, கம்பனி/ குழுமம் ECLs இன் வாழ்க்கைக் காலத்திற்குச் சமனான தொகையொன்றில் நட்டப் படிகளை அளவிடுகின்றது.

- அறிக்கைத் திகதியில் குறைவான கடன் இடர் கொண்டவையாகக் கருதப்பட்ட கடன் பிணைகள்
- ஆரம்ப அங்கீகரித்தல் முதல் கடன் இடர் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்காதுள்ள (அதாவது, நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் முழுவதும் கடன் தீர்க்காதிருப்பதற்கான இடர்) ஏனைய கடன் பிணைகளும் வங்கி மீதிகளும்

வியாபாரப் பெறவேண்டியவைகளிற்கான இழப்பு அனுமதித்தல்கள் ECLs இன் ஆயுள் காலத்திற்குச் சமமான தொகையில் எப்போதும் அளவிடப்படுகின்றது.

ஆரம்ப அங்கீகரித்தல் முதல் கடன் இடர் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்காதுள்ளது என நிச்சயிக்கையிலும் ECLs இனை மதிப்பிடுகையிலும், கம்பனி/குழுமம் கியரமோ அல்லது சிரமோ இன்றி கிடைக்கக்கூடிய தொடர்புடைய நியாயமான மற்றும் உறுதுணையாகவுள்ள தகவல்களைக் கருத்திற்கொள்கின்றது. இத்தகவல்கள் பண்புரீதியான மற்றும் அளவீட்டு ரீதியான தகவல்களை உள்ளடக்குவதுடன் கம்பனி/குழுமத்தின் வரலாற்று அனுபவங்கள் மற்றும் எதிர்காலத் தகவல்கள் உள்ளிட்ட அறிவிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

பின்வரும் நிலைமைகளில் நிதிச் சொத்துக்களைக் கையாழ்தல் வேண்டுமென கம்பனி/குழுமம் கருதுகின்றது.

- கடன் பெற்றவர் அவருக்குய கடன் கடப்பாடுகளை கம்பனி/குழுமத்திற்கு முழுமையாகச் செலுத்த வாய்ப்பில்லாத நிலையில் பிணையத்தை தேறச்செய்தல் போன்ற நடவடிக்கைகளிற்கு கம்பனி/ குழுமத்தினால் (ஏதேனும்) நடவடிக்கை எடுத்தல், அல்லது
- நிதிச் சொத்து 90 நாட்களிற்கு மேல் நிலுவையாகவுள்ள சந்தர்ப்பத்தில்

ஆயுட்கால ECLs என்பவை நிதிக் கருவியொன்றின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் முழுவதற்கும் கடன் தீர்க்கப்படாதிருப்பதற்கான அனைத்து சாத்தியமான நிகழ்வுகளும் கொண்ட ECLs ஆகும்.

ECLs இனை அளவிடுதல்

ECLs எப்பேதும் கடன் இழப்புக்களின் நிகழ்தகவு நிறையளித்த மதிப்பீடாகும். கடன் இழப்புக்கள் அனைத்து காசுப் பற்றாக்குறைகளின் தற்போதைய பெறுமதியில் (அதாவது ஒப்பந்தப் படி நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்பட வேண்டிய காசுக்கும், பெறுவதற்கு கம்பனி எதிர்பார்க்கின்ற காசு உட்பாய்ச்சலிற்கும் இடையிலான வேறுபாடாகும்.) அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்தின் தாக்கமுள்ள வட்டி வீதத்தின் அடிப்படையில் ECLs கழிவுநீக்கம் செய்யப்படுகின்றன.

நிதி நிலைமைக் கூற்றில் ECLs இற்கான படியினை சமர்ப்பித்தல்

காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களிற்கான இழப்புப் படிகள், சொத்தின் மொத்த முன்கொண்டுசெல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

FVOCI இலுள்ள கடன் பிணையங்களிற்கான இழப்புப் படியானது, இலாபம் அல்லது நட்டத்திற்கு சாட்டப்பட்டு OCI இல் அங்கீகரிக்கப்படுகின்றது

பதிவழித்தல்

நிதிச் சொத்தின் மொத்த முன்கொண்டுசெல் தொகை பெறப்படும் என்பதற்கான நியாயமான எதிர்பார்ப்புகள் காணப்படாத வேளையில் கம்பனி அந்த நிதிச் சொத்தை பதிவழிக்கின்றது. தனிப்பட்ட வாடிக்கையாளரைப் பொறுத்தவரை, கம்பனியின் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் அந்த நிதிச்சொத்து 360 நாட்களிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருக்கையில் கம்பனி அதனைப் பதிவழிக்கின்றது. நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களைப் பொறுத்தமட்டில், அவற்றிற்குரிய நிதிச் சொத்தினை பதிவழிப்பதற்கு முன்னர் அறவிடுவதற்கான நியாயமான எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றனவா என கம்பனி ஒவ்வொரு நிறுவனமாக மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. பதிவழிக்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு குறிப்பிடத்தக்க எதிர்பார்ப்பு காணப்படாதிருப்பின் மாத்திரமே அவற்றை கம்பனி பதிவழிக்கின்றது. இருப்பினும், பதிவழிக்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் கம்பனி தொடர்ந்து மேற்கொள்கின்றது.

3.2.4.2 நிதிசார் பொறுப்புக்கள்

3.2.4.2.1 ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு

நிதிசார்ந்த பொறுப்புக்கள் ஆரம்ப இனங்காணலும் அளவீடும் பொருத்தமானவாறு இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாகவும், கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் அல்லது பயனுள்ள ஒரு தளத்தில் தள சாதனங்களாக குறித்தொதுக்கப்பட்ட பாராதீனப்படுத்த முடியாதவை என்பவற்றினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் நிதிசார்ந்த பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

நிதிசார்ந்த சகல பொறுப்புக்களும் அடிப்படை ரீதியில் நியாய விலைப் பெறுமானத்தில் இனங் காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் என்பவற்றை பொறுத்த வரையில் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன.

வியாபார மற்றும் ஏனைய கொடுமதிகள், வங்கிமேலதிகப் பற்றுக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதிற்கான குழுவின் நிதிசார்ந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

3.2.4.2.2 தொடர்ந்து வரும் அளவீடு

நிதி சார்ந்த பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகுதியில் தங்கியிருக்கும்.

கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியை சுமந்து வருகின்ற கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் என்பன அதனைத் தொடர்ந்து செயல்வலுப் பெற்றிருக்கின்ற வட்டி வீத முறையியலைப் பிரயோகித்து கழிவுநட்டக் கிரயத்தில் அளவிடப்படுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்ற அதே நேரம் பொறுப்புக்கள் செயல் வலுப்பெற்றிருக்கின்ற வட்டி வீத முறையியல் (EIR) கழித்தல் படிமுறையினூடாக இனங்காணப்படுகின்றன.

கழிவுநட்டக் கிரயம் EIR முறையின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்ற ஏதாவது கழிவீட்டு அல்லது கொள்வனவு மீதான தவணைக்கட்டணம் மற்றும் கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றைக்கருத்திற் கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது. EIR கழித்தல் முறை நிதிக் கூற்றிலுள்ள நிதிசார்ந்த ஆகசெலவில் உள்ளடக்கப்படுகின்றது.

3.2.4.2.3 அங்கீகரிக்காதிருத்தல்

கடப்பாடு விடுவிக்கப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார்ந்த ஒரு பொறுப்பு இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற நிதிசார்ந்த ஒரு பொறுப்பு கணிசமான வித்தியாசமான அளவுகளில் அதே கடன் கொடுத்த தரப்பிடமிருந்து மற்றொரு தரப்பினால் அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற ஒரு பொறுப்பின் அளவுகளில் பிரதியிடப்படுகின்ற போது அத்தகையவைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. அத்தகைய ஒரு மாற்றம் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பில் இனங்காணாது விட்டுவிடப்படும் ஒரு செயலாக கருதப்படும். புதிய ஒரு பொறுப்பின் இனங்காணல் மற்றும் அந்தந்த கொணரப்படும் தொகைகளிலுள்ள வித்தியாசம் என்பன வருமானக் கூற்றில் இனங்காணாது விட்டுவிடப்படுகின்றன.

3.2.4.2.4 நிதிசார்ந்த கருவிகளை எதிரீடுசெய்தல்

இனங்காணாது விட்டுவிடப்பட்ட தொகைளை சமப்படுத்தும் பொருட்டு தற்போது நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டமுறையான உரிமை அல்லது அதே சமயத்தில் சொத்துக்களையும் மற்றும் பொறுப்புக்களையும் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது உணரச்செய்வதற்கான ஒரு எண்ணம் இருந்தால் அல்லது இருக்கின்ற நேரத்தில் மாத்திரம் நிதிசார்ந்த சொத்துக்களும் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புக்களும் சமப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் பதியப்படுகின்றன.

3.2.5 நிதிசாராத சொத்துக்களின் கழிவுநட்டம்

ஒரு சொத்துக்கு நட்டம் ஏற்படலாம் என்பதற்கான ஒரு அறிகுறிதென்படுகின்றதா என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, குழு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மதிப்பீடு செய்யும். ஏதாவதொரு அறிகுறிதென்படுகின்றது அல்லது ஒரு சொத்துக்கான வருடாந்த நட்டப் பரிசீலனை அவசியப்படுகின்றது எனில், குழு அத்தகைய சொத்தின் மீளறவடக்கூடிய தொகையை மதிப்பீடு செய்யும்.

சொத்தின் ஆகக்கூடிய தொகை அல்லது விற்பனை செய்வதற்கான காசு ஈட்டும் அலகின் (CGU) குறைந்த நியாயவிலைப் பெறுமான ஆகுசெலவுகள் மற்றும் பிரயோகத்திலுள்ள அதன் பெறுமானம் என்பன ஒரு சொத்தின் மீளறவிடக்கூடிய தொகையில் அடங்குகின்றன. அத்தகைய தொகையானது அத்தகைய சொத்து ஏனைய சொத்துக்களிலிருந்து அல்லது சொத்துக்கள் வகுதியிலிருந்து வரும் பாரியளவில் சுயாதீனமாகவிருக்கின்ற காசுப் பாய்ச்சல்களை ஈட்டாத வரையில் தனிப்பட்டவொரு சொத்தாக நிர்ணயிக்கப்படுவதில்லை. ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை அல்லது CGU அதன் மீளறவிடக்கூடிய தொகையை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய சொத்து நட்டம் ஏற்பட்ட சொத்தாக

கருதப்பட்டு, அதன் மீளறவிடக்கூடிய தொகை பதிவழிக்கப்படுகின்றது.

பிரயோகத்திலுள்ள பெறுமானத்தை மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அத்தகைய சொத்துக்கான குறித்த பொறுப்புக்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமானம் என்பவற்றின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு முன்கூட்டிய வரித்தள்ளுபடி வீதத்தைப் பிரயோகித்து தற்போதைய பெறுமானத்திற்கு தள்ளுபடி செய்யப்படுகின்றன. கிடைக்கக்கூடியதாக வுள்ளது எனில் விற்பனைக்கான, அண்மைகால சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான குறைந்த நியாய விலைப் பெறுமான கிரயங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன அத்தகைய கொடுக் கல் வாங்கல்களை இனங்காண முடியாது எனில், பொருத்தமான விலைமதிப்பீட்டு மாதிரி பிரயோகிக்கப்படும்.

இத்தகைய கணிப்பீடுகள் விலைமதிப்பீட்டுப் பெருக்கிகள், வெளிப்படையாக வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற துணை நிறுவனங்களுக்கான குறிப்பீடு செய்யப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாய விலைப் பெறுமான சுட்டிகள் என்பவற்றினால் உறுதி செய்யப்படுகின்றன.

பொருள் இருப்புக்களின் மீதான நட்டங்கள் அடங்கலாக தொடர்ந்து நிகழும் இயக்கச் செயற்பாடுகளின் பாதிப்பு ட்டங்கள், ஏனைய முழுமையான வருமானத்திற்கு கொண்டுவரப்பட்ட மீள்விலை மதிப்பீடு காணப்படுகின்றவிடத்து முன்னர் மீள்விலை மதிக்கப்பட்ட ஒரு சொத்து தவிர, நட்டம் ஏற்பட்ட சொத்தின் தொழிற்பாட்டிற்கு இணங்க அந்த செலவின வகுதிகளிலுள்ள வருமானக்கூற்றில் இனங் காணப்படுகின்றன. இத்தகையவொரு சந்தர்ப்பத்தில் நட்டமும் கூட ஏதாவதொரு முன்னைய மீள்விலைமதிப்பீட்டுத் தொகை வரை ஏனைய முழுமையான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

முன்னர் இனங்காணப்பட்ட பாதிப்பு நட்டம் மேலும் நீடித்திருக்குமா அல்லது அந்த நட்டம் குறைந்திருக்குமா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு நல்லெண்ணத் தொகை தவிர, சொத்துக்கள் தொடர்பில், அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய அறிகுறி காணப்பட்டால், குழு சொத்தின் அல்லது காசுஈட்டும் அலகின் மீளறவிடப்பட வேண்டிய தொகையை மதிப்பிடும். கடந்த பாதிப்பு நட்டம் இனங்காணப் பட்டதால், சொத்தின் மீளறவிடப்பட வேண்டிய தொகையை நிர்ணயிக்கும் பொருட்டு பிரயோகிக்கப்பட்ட எடுகோள்களில் ஒரு மாற்றம் இருந்துள்ளதாயின் மாத்திரம், முன்னர் இனங்காணப்பட்ட பாதிப்பு நட்டம் ஒதுக்கிவைக்கப்படும். அத்தகைய ஒதுக்கிவைத்தல் மட்டுப்பட்டிருக்கும். ஆகையால், சொத்தின் கொணரப்படும் தொகை அதன் மீளறவிடப்பட வேண்டிய தொகையை விஞ்சாது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற அந்தக் கொணரப்படும் தொகையையும் விஞ்சாது. தேறிய தேய்மானமும், பாதிப்பு நட்டமும் முன்னைய ஆண்டுகளிலுள்ள சொத்துக்கள் தொடர்பில் இனங் காணப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஒதுக்கிவைத்தலானது, சொத்து அந்த ஒதுக்கல் ஒரு மீள்விலைமதிப்பீட்டு அதிகரிப்பாகக் கருதப்படுகின்ற ஒரு மீள்விலை மதிக்கப்பட்ட தொகையில் கணிப்பிடப்படாத வரையில் வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

3.2.6 குத்தகைகள்

ஒரு ஒப்பந்தம் ஒரு குத்தகை அல்லது உள்ளதா என்பதை ஒப்பந்த தொடக்கத்தில் குழுமம் மதிப்பீடு செய்கிறது. அதாவது அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை ஒரு குறிப்பிட்ட காலத்தற்கு கட்டுப்படுத்துவதற்கான உரிமையை SLFRS 16 இலுள்ள வழிகாட்டல்களின் படி ஒப்பந்தம் கருத்தில் கொண்டால் மாத்திரம். அடையாளம் காணப்பட்ட சொத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அனைத்துப் பொருளாதாரப் பலன்களையும் பெறுவதற்கு குத்தகைதாரருக்கு உரிமை உள்ளதா என்பதையும், அடையாளம் காணப்பட்ட சொத்தை எப்படி, எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை வழிநடத்தும் உரிமையையும் இந்த மதிப்பீடு கருத்திற் கொள்கிறது.

ஒரு ஒப்பந்தம் குத்தகையா அல்லது ஒப்பந்தமா என்பதை மதிப்பாய்வு செய்த பிறகு, SLFRS 16 இல் வழங்கப்பட்ட விரிவான வழிகாட்டுதலின் அடிப்படையில் அது மேலதிக குத்தகை அல்லது குத்தகை அல்லாத (சேவை) கூறுகளைக் கொண்டிருக்கிறதா என்பதை குழுமம் தீர்மானிக்கிறது. அதன்படி, அடையாளத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை குத்தகைதாரர் சொந்தமாகவோ அல்லது குத்தகைதாரருக்கு உடனடியாகக் கிடைக்கக்கூடிய பிற ஆதாரங்களோடும் அடிப்படைச் சொத்தைப் பயன்படுத்துவதன் மூலம் குத்தகைதாரர் பயனடைய முடியும் என்றால், அந்தச் சொத்து ஒரு தனி குத்தகை ஒப்பந்தத்தின் அங்கமாகும்.

3.2.6.1 குத்தகைதாரராக குழுமம் செயற்படுதல்

SLFRS 16 இன் படி, ஒரு ஒப்பந்தத்தில் ஒரு குத்தகைக் கூறும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிக குத்தகை கூறுகளும் அல்லது குத்தகை அல்லாத கூறுகளும் காணப்படுகின்றன என்று குழுமம் தீர்மானிக்கும் போது, ஒப்பந்தத்தில் உள்ள பரிசீலனையானது ஒவ்வொரு குத்தகை கூறுக்கும் தொடர்புடைய தனித்த விலையின் அடிப்படையிலும் குத்தகை கூறு மற்றும் குத்தகை அல்லாத கூறுகளின் மொத்த தனித்த விலையின் அடிப்படையிலும் ஒதுக்கப்படுகிறது. குத்தகையின் தொடக்க தேதியில் அதன் பயன்பாட்டு உரிமையையும் குத்தகைப் பொறுப்பையும் குழுமம் அங்கீகரிக்கிறது.

பயன்பாட்டிற்கான உரிமை சொத்து

பயன்பாட்டிற்கான உரிமைச் சொத்து ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன், இது தொடக்கத் தேதியில் அல்லது அதற்கு முன் செய்யப்பட்ட எந்தவொரு குத்தகைக் கொடுப்பனவுகளுக்கும் சரிசெய்யப்பட்ட குத்தகைப் பொறுப்பின் ஆரம்பத் தொகையாக காணப்படும். மேலும் ஏதேனும் ஆரம்ப நேரடி செலவுகள் மற்றும் கிளைகள் அல்லது அலுவலக வளாகங்களில் ஏதேனும் மேம்பாடுகள் செய்யப்பட்டுகின்ற போது அதற்கான அகற்றல்களுக்கும் அப்புறப்படுத்தல்களுக்கும் ஏற்படும் கிரயங்களின் மதிப்பீடு ஆகியவற்றையும் இது உள்ளடக்கியதாகும். தொடக்கத் தேதியிலிருந்து குத்தகைக் காலம் முடிவடையும் வரை நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி, பயன்பாட்டு உரிமைச் சொத்துகள் அதன்பின்னர் தேய்மானம் செய்யப்படுகிறது. அத்துடன், பயன்பாட்டு உரிமைச் சொத்து அவ்வப்போது காலக்கழிவு நட்டத்திற்காக குறைக்கப்படுவதுடன் அவ்வாறு ஏதேனும் இருந்தால், குத்தகைப் பொறுப்பின் சில மறுஅளவீடுகளுக்கு சீராக்கப்படுகிறது.

பயன்படுத்துவதற்கு உரித்தான சொத்துக்கள் அவற்றின் தொடக்க திகதியில் பெறப்பட்ட குத்தகை சலுகைகளிற்காக குத்தகை காலத்தின் அவ்வாறான குறுகிய காலத்திற்கும் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்காலத்திற்கும்

பின்வருமாறு ஒரு நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகின்றன.

- நிலம் மற்றும் கட்டிடம் 2 முதல் 4 ஆண்டுகள்

குத்தகை காலத்தின் முடிவில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் உரிமையானது குழுமத்திற்கு மாற்றப்பட்டால் அல்லது கிரயமானது கொள்வனவு விருப்பத்தின் செயற்பாட்டை பிரதிபலிக்கிறது என்றால் தேய்மானம் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது.

பயன்படுத்துவதற்கு உரித்தான சொத்துக்களும் நட்டக்கழிவிற்கு உட்படுகின்றன. தயவுசெய்து நிதி சாராத சொத்துக்களின் நட்டக்கழிவுக்கான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பார்க்கவும்

குத்தகைப் பொறுப்புக்கள்
தொடக்கத் தேதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் குத்தகைப் பொறுப்பு அளவிடப்பட்டு, குத்தகையில் மறைமுகமாக உள்ள வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி அல்லது அந்த விகிதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாவிட்டால், குழுமத்தின் அதிகரிக்கும் கடன் விகிதத்தைப் பயன்படுத்தி கழிவீடு செய்யப்படுகிறது. பொதுவாக, குழுமம் அதன் அதிகரிக்கும் கடன் விகிதத்தை கழிவீட்டு விகிதமாகப் பயன்படுத்துகிறது.

குழுமமானது பல்வேறு வெளிப்புற மூலங்களிலிருந்து வாங்கிய கடன்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அதன் அதிகரிக்கும் கடன் விகிதத்தை தீர்மானிப்பதுடன் குத்தகையின் விதிமுறைகள் மற்றும் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் வகையைப் பிரதிபலிக்கும் வகையில் சில மாற்றங்களைச் செய்கிறது.

குத்தகைப் பொறுப்பின் அளவீட்டில் சேர்க்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:
- பிந்திய நிரந்தரக் கொடுப்பனவுகள் உட்பட நிலையான கொடுப்பனவுகள்;
- தொடக்கத் தேதியில் உள்ள குறியீட்டு அல்லது விகிதத்தைப் பயன்படுத்தி முதலில் அளவிடப்பட்ட ஒரு குறியீட்டு அல்லது விகிதத்தைச் சார்ந்து மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள்;
- எஞ்சிய மதிப்பு உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகைகள்; மற்றும்
- ஒரு கொள்முதல் விருப்பத்தின் கீழ் நடப்பு விலை, குழுமம் நியாயமான முறையில் செலவிட உறுதியாக உள்ள, விருப்பமான குத்தகை கொடுப்பனவுகள்

குழுமத்தின் குத்தகை பொறுப்புகள் வட்டி-தாங்கும் கடன்கள் மற்றும் கடன்களை உள்ளடக்குகின்றன (குறிப்பு 22 ஐப் பார்க்கவும்).

3.2.6.1.1 குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த மதிப்புள்ள சொத்துகளின் குத்தகைகள்
குறைந்த மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் குறுகிய கால குத்தகைகளுக்கான பயன்பாட்டு உரிமைகள் மற்றும் குத்தகை பொறுப்புகளை அங்கீகரிப்பதில்லை என கம்பனி/குழு தெரிவு செய்துள்ளது. இந்த குத்தகைகளுடன் தொடர்புடைய குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் ஒரு செலவாக குழுமம் அங்கீகரிக்கிறது.

3.2.6.2 குத்தகைக்கு விடுபவராக குழுமம்
ஒரு சொத்தின் உரிமையாளருக்கு தற்செயலான அனைத்து அபாயங்களையும் வெகுமதிகளையும் குழுமம் கணிசமாக மாற்றாத குத்தகைகள் செயற்பாட்டுக் குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. எழும் வாடகை வருமானம் குத்தகை விதிமுறைகளின் அடிப்படையில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. மற்றும் அதன் செயற்பாட்டு பண்பு காரணமாக இலாபம் அல்லது நட்டக் கூற்றிலுள்ள வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. செயற்பாட்டுக் குத்தகைக்கு பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ஏற்படும் ஆரம்ப நேரடி செலவுகள் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் சுமந்து செல்லும் தொகையில் சேர்க்கப்பட்டு வாடகை வருமானத்தின் அதே அடிப்படையில் குத்தகை காலத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2.6.2.1 நிதிக் குத்தகைகள் – குத்தகைதாரராக குழுமம்
SLFRS 16 இன் படி, ஒரு குத்தகையானது, ஒரு அடிப்படைச் சொத்தின் அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் உரிமையாளருக்கு மாற்றுமாயின் அச்சொத்து நிதிக் குத்தகையான்றாக வகைப்படுத்தப்படுகின்றது. தொடக்கத் தேதியில், குழுமமானது நிதிக் குத்தகையின் கீழ் வைத்திருக்கும் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் அங்கீகரித்து, குத்தகையின் நிகர முதலீட்டிற்குச் சமமான தொகையில் பெறத்தக்க குத்தகையாக முன்னிலைப்படுத்துகின்றது. குத்தகைக்கான நிகர முதலீடானது, குத்தகையில் மறைமுகமாக உள்ள வட்டி விகிதத்தில் பெறக்கூடிய குத்தகைக் கொடுப்பனவுகளை கழிவீடு செய்வதன் மூலம் பெறப்படுகிறது. உதாரணமாக: குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியை அடிப்படைச் சொத்தின் நியாயமான பெறுமதி மற்றும் ஆரம்ப நேரடிச் செலவுகளுக்குச் சமமாக ஏற்படுத்தும் விகிதம்.

குத்தகைக்கான நிகர முதலீட்டிற்கு SLFRS 9 இல் உள்ள அங்கீகார நீக்கம் மற்றும் நட்டக்கழிவுத் தேவைப்பாடுகளை குழுமம் பிரயோகிக்கிறது. குத்தகையின் மொத்த முதலீட்டைக் கணக்கிடுவதில் பயன்படுத்தப்படும் உத்திரவாதமில்லாத எஞ்சிய பெறுமதிகளை குழுமம் தொடர்ந்து மீளாய்வு செய்கிறது.

3.2.6.2.2 செயற்பாட்டுக் குத்தகைகள் – குத்தகைதாரராக குழுமம்
SLFRS 16 இன் படி, ஒரு குத்தகையானது, ஒரு அடிப்படைச் சொத்தின் உரிமையுடன் தொடர்புடைய அனைத்து இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமாக மாற்றவில்லை என்றால், அது செயற்பாட்டு குத்தகையாக வகைப்படுத்தப்படுகிறது. செயற்பாட்டு குத்தகைகளிலிருந்தான குத்தகை பெறுவனவுகளை நேர்கோட்டு அடிப்படையில் வருமானமாக குழுமம் அங்கீகரிக்கிறது. செயற்பாட்டு குத்தகைகளிற்காக பேச்சுவார்த்தை நடத்துவதில் ஏற்படும் ஆரம்ப நேரடி செலவுகள் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகையில் சேர்க்கப்பட்டு வாடகை வருமானத்தின் அடிப்படையில் குத்தகை காலத்தில் அங்கீகரிக்கப்படும். நிகழத்தக்க வாடகைகள் அவை சம்பாதிக்கும் காலத்தில் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2.7 ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுகப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்
பொறுப்புத் தொகையை மேற்கொள்ளக்கூடிய நம்பத்தகுந்த ஒரு மதிப்பீடு மற்றும் பொறுப்பு என்பவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு அவசியப்படுத்தப்படும் பொருளாதார நன்மைகள்

பொதிந்துள்ள வளங்களின் வெளிப்பாய்ச்சல் அநேகமாக இருக்கலாம் என்ற கடந்த கால ஒரு விளைவின் பயனாக குழு தற்பொழுது ஒரு கடப்பாட்டை (சட்டமுறையாக அல்லது ஆக்கபூர்வ) கொண்டுள்ளது எனும் போது ஏற்பாடுகள் இனங் காணப்படுகின்றன. மீளளிக்கப்பட வேண்டும் என்ற அதே அளவான ஒரு ஏற்பாட்டை அல்லது அத்தகைய எல்லா ஏற்பாடுகளையும் குழுமம் எதிர்பார்க்கின்றவிடத்து, உதாரணமாக, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ்,மீளளிப்புச் செய்ய வேண்டிய தொகை தனியான ஒரு சொத்தாக இனங்காணப்படும். ஆனால், மீளளிப்புச் செய்ய வேண்டிய தொகை உண்மையானதாக இருக்கும் பட்சத்தில் மாத்திரம் இவ்வாறு செய்யப்படும். ஒரு ஏற்பாடு தொடர்பான செலவு ஏதாவதொரு மீளளிப்பின் தேறிய வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்படும்.

பணத்தினது காலப் பெறுமானத்தின் பயன்தகுதன்மை தெளிவாக இருக்குமாயின், பொருத்தமானவிடத்து பொறுப்புக்கான விஷேட கடப்பாடுகளைப் பிரதிபலிக்கின்ற நடைமுறையிலுள்ள வரிக்கு முற்பட்ட வீதத்தைப் பிரயோகித்து ஏற்பாடுகள் கழிவீடு செய்யப்படும். இவ்வாறு கழிவீட்டு முறை பிரயோகிக்கப் படுகின்றவிடத்து, கால அளவின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பு ஒரு நிதிசார்ந்த கிரயமாக இனங்காணப்படும்.

வளங்களின் வெளியேற்றம் கைக்கிட்டிய தொலைவில் இல்லாத அனைத்து நிகழத்தக்க பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களிற்கான ஒரு குறிப்பாக வெளிப்படுத்தப்படும்,.

பொருளாதார நன்மையின் பெறுவனவு சாத்தியமாக இருப்பின், அனைத்து நிகழத்தக்க சொத்துக்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

உத்தரவாத ஏற்பாடு

குழுமத்தின் வழக்கமான வணிக நடைமுறைகளுக்கு இணங்க, குறைபாடுகளின் பொதுவான பழுதுபார்ப்புக்கான உத்தரவாதங்களை குழுமம் வழங்குகிறது. உற்பத்திசெய்து விற்கப்படும் போது இந்த உத்தரவாதங்கள் தொடர்பான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரம் வரலாற்று அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. உத்தரவாதம் தொடர்பான செலவுகளின் ஆரம்ப மதிப்பீடு ஆண்டுதோறும் திருத்தப்படுகிறது.

3.2.8 ஓய்வூதிய நலப் பொறுப்பு

க. குறுகிய கால ஊழியர் நலன்கள்

குறுகிய கால ஊழியர் நலக் கடப்பாடுகள் கழிவீடு செய்யப்படாத அடிப்படையில் அளவிடப்படுவதுடன் தொடர்புடைய சேவை வழங்கப்படுவதால் செலவாக காண்பிக்கப்படும். ஊழியர்களின் கடந்தகால சேவையின் விளைவாக இந்தத் தொகையைச் செலுத்துவதற்கான தற்போதைய சட்டப்பூர்வ அல்லது ஆக்கப்பூர்வமான கடப்பாடு குழுமத்திற்கு காணப்பட்டு, அதனை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமமாக இருப்பின், குறுகிய காலத்தில் ரொக்கமாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகைக்கு ஒரு பொறுப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

ii. **குறித்துரைத்த பங்களிப்புத் திட்டங்கள் – ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம்**

ஊழியர்கள் அந்தந்த நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்க ஊழியர் சேமலாப நிதிக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் பங்களிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். கம்பனி ஊழியர்களின் மொத்த வேதனத்தில் 15 வீதத்தையும் மற்றும் 3 வீதத்தையும் முறையே ஊழியர் சேமலாப நிதிக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் பங்களிப்புச் செய்கின்றது. இந்தக் கிரயங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

iii. **குறித்துரைத்த நலத் திட்டம் – பணிக்கொடை**

வாக்குறுதியளிக்கப்பட்ட பணிக்கொடை ஓய்வூதிய நலனாகிய இந்த திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தினை ஒரு நிபுணரின் ஆலோசனையுடன் குழுமம் அளவிடுகின்றது.

அடுத்த வழக்கமான இயல்பான மதிப்பீடு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் எந்தவொரு காலத்திற்கும் கட்டணத்தை நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர் வழங்கிய முறையான மதிப்பீடு பயன்படுத்தப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்குவதற்கான செலவு திட்டமிடப்பட்ட அலகு கடன் முறைமையப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. நிகர வட்டி குழுவிற்கு பொருந்தாது தவிர்த்து இயல்பான ஆதாயங்கள் மற்றும் இழப்புக்களை உள்ளடக்கிய மறு அளவீடுகள், நிதி நிலைமைக் கூற்றில் உடனடியாக தொடர்புடைய வரவு அல்லது செலவு மூலம் ஏனைய விரிவான வருமானத்தின் மூலம் தக்க வருவாயை தக்கவைத்துக் கொள்ளும் காலப்பகுதியில் அவை அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்படும் மறு அளவீடுகள் அடுத்தடுத்த காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள வகைப்படுத்தப் படவில்லை.

நிகர வரையறுத்துரைத்த பொறுப்புக்கு கழிவு வீதத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நிகர வட்டி கணக்கிடப்படுகிறது. இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விற்பனை செலவு மற்றும் நிர்வாக செலவுகள் ஆகியவற்றின் கீழ் நிகர வரையறுத்துரைத்த நலக் கடப்பாட்டில் பின்வரும் மாற்றங்களை குழுமம் அங்கீகரிக்கிறது.

- தற்போதைய சேவை செலவுகள் கடந்த கால சேவை செலவுகள், குறைப்புக்கள் மற்றும் வழக்கமான அல்லாத குடியேற்றங்கள் மீதான ஆதாயங்கள் மற்றும் இழப்புக்களை உள்ளடக்கிய சேவை செலவுகள்.
- நிகர வட்டிச் செலவினம் அல்லது வருமானம்

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம், இந்தப் பொறுப்பு 05 வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தின் பேரில் மாத்திரமே எழும். பணிக்கொடைப் பொறுப்பு தொடர்பில் வெளிவாரிய நிதியளிக்கப்படுவதில்லை.

3.2.9 வருமானக் கூற்று

3.2.9.1 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்

குழுமம் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் மின்மானிகளை விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடு வாடிக்கையாளர்களிற்கு கைமாற்றப்படுகையில் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. இதன்மூலம் அப்பொருட்கள் அல்லது சேவைகளிற்கு ஈடாக உரிமை மாற்றப்படும் என்று குழுமம் எதிர்பார்க்கும் கருத்தை

பிரதிபலிப்பதாக உள்ளது. குழுமம் பொதுவாக வருமானத்தை ஈட்டுவதே முதன்மையானது என முடிவுசெய்துள்ளது.

மின்சார விநியோகத்தின் மூலமான வருமானம், மின்சாரம் வடிக்கையாளர்களிற்கு வழங்கப்படும் நேரத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

மின்மானிகளை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானம் பொதுவாக ஒற்றைச் செயலாற்றல் கடப்பாடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சொத்தின் கட்டுப்பாடு வாடிக்கையாளர்களிற்கு மாற்றப்படுகையில் அதாவது பொதுவாக உபகரணம் விநியோகிக்கப்படுகையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

கொடுக்கல் வாங்கல் விலையின் ஒருபகுதியை ஒதுக்க வேண்டியது போன்ற (உதாரணமாக: உத்தரவாதம்) தனித்தனி செயலாற்றல் கடப்பாடுகளான ஏனைய வாக்குறுதிகள் ஒப்பந்தத்தில் காணப்படுகின்றனவா என்பதனை குழுமம் கருத்திற் கொள்கின்றது. உபகரண விற்பனைக்கான கொடுக்கல் வாங்கல் விலையினை நிர்ணயிப்பதில், மாறுபட்ட தொகைகள், குறிப்பிடத்தக்க நிதியளித்தல் கூறு இருத்தல், பணமல்லாத விடயங்கள் மற்றும் வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் (ஏதேனுமிருப்பின்) ஆகியவற்றை குழுமம் கருத்திற்கொள்கின்றது.

மாறுபட்ட கருத்திலெடுத்தல்கள்

ஒப்பந்தமொன்றிலுள்ள தொகை முரண்பாடான தொகையொன்றாக காணப்படுமாயின், வாடிக்கையாளர்களிற்கு என்ன விலையில் பொருட்கள்/ சேவைகளை கைமாற்றவேண்டும் என்பதனை குழுமம் பரிசீலனைசெய்து மதிப்பிடுகின்றது. முரண்பாட்டுத் தொகைகள் ஒப்பந்த தொடக்கத்தில் மதிப்பிடப்பட்டு முரண்பாடான தொகையுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மை பின்னர் தீர்க்கப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தின் அளவில் குறிப்பிடத்தக்க வருமானத்தை நீக்கவேண்டி ஏற்படாது என்பது மிகவும் சாத்தியமானவரை கட்டுப்படுத்தப்படுகின்றது.

குறிப்பிடத்தக்க நிதியளித்தல் கூறு

ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவையை வடிக்கையாளர்களிற்கு கைமாற்றப்படுவதுடன், வாடிக்கையாளர் அந்த நலனுக்காக பணம் செலுத்துகையில் அல்லது ஒரு குறிப்பிடத்தக்க நிதியளித்தல் கூறின் தாக்கம் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவாக இருக்கையில் குழுமம் உறுதியளித்த தொகையினை சீராக்குவதில்லை.

ஒப்பந்த மீதிகள்

ஒப்பந்தச் சொத்துக்கள்
ஒப்பந்தச் சொத்து என்பது வாடிக்கையாளர்களிற்கு மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளிற்கு ஈடாக கருத்திற்கொள்வதற்கான உரிமையாகும். வாடிக்கையாளர் பரிசீலிப்பதற்கு முன்னர் அல்லது பணப் செலுத்தப்படுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களிற்கு பொருட்கள் அல்லது சேவைகளை கைமாற்றுவதற்கு குழுமம் செயற்படுமாயின், நிபந்தனைக்கு உட்பட்டு ஈட்டிய வருமானத்தில் சொத்து அங்கீகரிக்கப்படுகின்றது.

வியாபார வருமதிகள்
வருமதிகள் என்பது நிபந்தனையற்ற பெறுமதியொன்றிற்கான குழுமத்திற்கு உள்ள உரிமையினைக் குறிக்கின்றது. (அதாவது, நிலுவையிலுள்ள தொகையினை செலுத்துவதற்கு மாத்திரமே நேரகாலம் தேவைப்படுகின்றது.)

ஒப்பந்தப் பொறுப்புக்கள்
ஒப்பந்தப் பொறுப்பு என்பது வாடிக்கையாளர்களிடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகளை கைமாற்றுவதற்கான கடப்பாடாகும். குழுமம் அதனைப் (கருத்திற்கொள்ள வேண்டிய தொகை) பரிசீலிக்கின்றது. குழுமம் பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு கைமாற்றுவதற்கு முன்னர் ஒரு வாடிக்கையாளர் அவற்றை பரிசீலித்தால், அதற்காக பணம் செலுத்தப்படுகையில் அல்லது கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயின் (எது முதலில் நிகழ்கின்றது என்பதனை பொறுத்து) பொறுப்பு அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்தத்தின் கீழான செயலாற்றல் கடமைகளை குழுமம் நிறைவேற்றுகையில் ஒப்பந்தப் பொறுப்புகள் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2.9.1.1 வருமானத்தை பிரித்தொதுக்குதல்
பொருளாதார காரணிகளால் தாக்கத்திற்கு உட்படுகின்ற வருவாய் மற்றும் காசுப் பாய்ச்சல், இயல்புநிலை, பெறுமானம், நேரம் மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை :SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்து வருமானம்" எனும் நியமத்தின் கீழ் வருமானத்தை பிரித்தொதுக்க வேண்டிய தேவைப்பாடு விவரிக்கப்படுகிறது. குழுமம்/ கம்பனி பின்வரும் வகைகளின் கீழ் வருவாயைப் பிரிக்கிறது.

- கைத்தொழில்துறை
- ஹோட்டல்கள்
- குடியிருப்புகள்
- வணிகம்
- தெரு விளக்கு
- மதத் தளங்கள்
- தற்காலிக இணைப்புகள்
- மின்மானி விற்பனை

3.2.9.2 நிதிசார் வருமானம்
அறவீடு ஐயத்திற்குரியதாக இல்லாவிட்டால் நிதிசார் வருமானம் வட்டிச் சம்பாத்தியமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

3.2.9.3 பங்கிலாபம்
பணம் பெறுவதற்கான குழுமத்திற்குரிய உரிமை ஏற்பட்டதும் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

3.2.10 ஏனைய வருமானம்
ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2.11 நுகர்வோர் பங்களிப்பு மீதான பிற்போட்ட வருமானம்
புதிய சேவை இணைப்புக்களை நிறுவதற்காக பொருத்தப்பட்ட சொத்துக்களின் கிரயத்தினை குறைப்பதற்காக நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகள் பிற்போட்ட கடப்பாடுகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. புதிய சேவை இணைப்புச் சொத்துக்கள் 20 ஆண்டுகளில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. தொடர்புடைய நுகர்வோர் பங்களிப்புகள் அதனையொத்த 20 ஆண்டுகளிற்கு இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றப்படுகின்றன.

3.2.12 செலவினத்தை அங்கீகரித்தல்

